விலை சதம் 25. தொலைபேசி 23411

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, வைகாசி 10உ (24-5-71) திங்கள் ற. அவ்வல் பிறை 28 புத்தகம் 25 இதழ் 27

'யோக பலத்தினும் சிறந்த பலமில்லை
ஞான ஒளியினும் சிறந்த நண்பனில்லை
மாயையினும் கொடிய தளை இல்லை
ஆணவத்தினும் கொடிய பகை இல்லை'

—கிரந்த ஸம்ஹிதை.

யோகக்கலை என்னும் அரிய நூலை விளக்கப் படங்களுடன் 3வது பதிப்பாக வெளியிட்டுள்ளோம். 10 மில்க் வைற் சோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
யாழ்ப்பாணம்.

# வாலைச்சுருட்டினார் வட்டுக்கோட்டை எம்.பி.

## திருத்தப் பிரேரணைகளுக்கு அரோகரா!

அரசியல் நிர்ணய சபையில் தமிழ் காங்கிரஸ் சார்பில் தனியாகத் திருத்தங்களைக்கொண்டுவரப்போவதாக கூறித்திரிந்த வட்டுக்கோட்டை பா. உ. திரு.ஆ. தியாகராஜா இறுதியில் வாலைச் சுருட்டிக் கொண்டுவிட்டார். தமது பெயரில் உள்ள திருத்தப் பிரேரணைகளைப்பிரேரிக்கப் போதில்லையென்று அரசியல் நிர்ணயசபையில் இவ்வாரம் அறிவித்துவிட்டார்.

வல்வையில் நடைபெற்ற தமிழ்கட்சிகளின் மாநாட்டில் ஏற்பட்ட ஒற்றுமையை முறியடிக்கும் நோக்குடன் தாம் தனியாக திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவருவதாக தமிழ் காங்கிரஸ் பா. உ.வும் இப்போதைய ஆளுங்கட்சி அடிவருடியுமான திரு: ஆ: தியாகராசா கூறிவந்தார். அவரது பெயரில் அடிப்படைத் திர்மானங்களுக்கான பல திருத்தப் பிரேரணைகளும் அரசியல் நிர்ணயசபை நிகழ்ச்சிநிரல் புத்தகத்தில் இடம்பெற்றிருக்கவும் காணப்பட்டன.

தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து, போதனமொழி, நீதிமன்ற மொழிபோன்ற பலவற்றிலும் தமிழ் மக்களுக்கு சாதகமான பல திருத்தங்களைக்கொண்டு வரப்போவதாக வட்டுக்கோட்டையார் கூறியிருந்தார்.

ஆனல் அந்தோ பரிதாபம், அம்மையாரின் திருவடிகளில் சரணாகதியடைந்துவிட்ட பின் அவரால் மேற்கொண்டு என்ன செய்ய முடியும்? தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்தும் திருத்தங்களை கொண்டுவந்து அரசாங்கக் கட்சிக்கு 'தொல்லை' கொடுக்க தமிழ் காங்கிரஸ் பா. உ.க்கள் விரும்புவார்களா?

'நீயே சரணம்தாயே...... ஏதோ உன் கடைக்கண் பார்வை தமிழினத்துக்கு கிடைத்தால் போதும், நாங்

(11-ம் பக்கம் பார்க்க)

இதில் இடம்பெற்ற செய்தி தணிக்கை அதிகாரியால் வெட்டப்பட்டுவிட்டது.

சுதந்திரன் தரும் புத்தம் புது அம்சம்

★

"தீக்குள் விரலை வைத்தால்"

★

யாழ்—ஜனர்த்தனன் எழுதுகிறார்

★

விறுவிறுப்பும் சுவையும் நிறைந்த தொடர் நவீனம்

★

ஆரம்பத் திகதியை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்!

## அஸீஸுக்கு அரசியல் தெளிவு இனியேனும் ஏற்படுமா?

தங்களுக்குள் எத்தனை குத்துவெட்டுக்கள் இருப்பினும் தமிழினத்திற்கு உரிமைகள் வழங்கப்படுவதை எதிர்ப்பதில் சிங்களக்கட்சிகள் அனைத்தும் ஒன்று திரண்டு விடுகின்றன என்ற உண்மை அரசியல்நிர்ணய சபையில் இவ்வாரம் தெளிவாக அம்பலமாகியது.

அடிப்படை உரிமைகள் பற்றிய விவாதத்தின்போது பிரஜைகள் என்றிருப்பதற்குப்பதிலாக 'ஆட்கள்' என்றிருக்கவேண்டுமென்ற தீர்மானத்தை நியமன உறுப்பினரான ஜனாப் அசீஸ் கொண்டுவந்தார். இத்திருத்தம் 10 இலட்சம் மலையகத் தமிழ்மக்களைப் பொறுத்தவரை அதிமுக்கியமானது என்று வாதாடினார் ஜனாப் அசீஸ்.

அசீசின் இத்தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அவர் சார்ந்துள்ள ஆளுங்கட்சியே அவரது காலை வாரிவிட்டது: அசீசின் தீர்மானத்தை எதிர்த்து அரசாங்கக்கட்சியினரும்

(2ம் பக்கம் பார்க்க)

### 'மொழித் திருத்தங்களும் நிராகரிக்கப்படின்....

# அரசியல் நிர்ணயசபையிலிருந்து வெளியேற வேண்டி நேரிடும்'

## காவலூர் பா. உ. விடுத்த எச்சரிக்கை!

தமிழ் மொழியுரிமைகள் சம்பந்தமாக தமிழரசுக்கட்சி கொண்டுவரும் திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டால், நாங்கள் தொடர்ந்தும் இச்சபையில் இருப்பதால் எதுவித பயனுமில்லை — வெளியேற வேண்டி நேரிடும்.''

—மேற்கண்டவாறு அரசியல் நிர்ணயசபையில் 14.5.71ல் உரையாற்றிய ஊர்காவற்றுறைப் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர்:-

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இது ஓர் அரசியல் அமைப்புச் சபையாக இருந்தாலும் கூட இங்கே ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் தான் நாங்கள் இயங்கிக்கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்களும் சிங்களம்

(11-ம் பக்கம் பார்க்க)

## யார் இந்த திலக்?

''ஏனைய நாடுகள் பலவற்றில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவனும் அல்ஜீரியாவில் நடைபெற்ற புரட்சியில் முக்கிய பங்கு எடுத்தவனும் உலகப் பிரசித்திபெற்ற பயங்கரவாதியுமான 'திலக்' என்னும் ஒருவன் இலங்கையில் இருப்பதாக கூறப்படுகிறது. இவனும் இங்குள்ள பயங்கரவாத இயக்கத்தின் தலைவர்களில் ஒருவன் என்றும் நம்பப்படுகிறது.''

—மூதவையில் திருச்செல்வம் (20-5-71)

## அடுத்த இதழில்

அரசியல் நிர்ணய சபையில் உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி. தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் ஆகியோர் நிகழ்த்திய உரைகள் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கொல்வினின் குதர்க்கம்

இன்று அரசியலமைப்புச் சட்ட அமைச்சராக இருக்கும் டாக்டர் கொல்வின். ஆர். டீ. சில்வா ஒரு காலத்தில் சிறுபான்மை மக்களின் இரட்சகராக தம்மைக் காட்டிக் கொண்டவர்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் உரத்த குரலெடுத்து முழங்கி வந்தவர்.

வகுப்பு வாதச் சேற்றில் சிக்காதவர் என்று பொதுவாகக் கருதப்பட்டவர்;

அப்படிப்பட்டவரான டாக்டர் கொல்வின், இவ்வாரம் அரசியல் நிர்ணய சபையில் கூறியிருக்கும் ஒரு கருத்தைப் படித்தபோது, இது கொல்வினின் கூற்றுத்தானு என்று திகைக்கவேண்டிய நிலை நமக்கு ஏற்படுகிறது;

''சட்டரீதியாக உரிமைகளை வழங்குவதன் மூலம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது; பெரும்பான்மை மக்களின் நல்லெண்ணத்தைக் கொண்டே சிறுபான்மை இனத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்'' என்று டாக்டர் கொல்வின் பேசியிருக்கிறார்—

டாக்டர் கொல்வினின் மேற்படி கருத்தைக் கேட்டு இந்நாட்டுச் சிறுபான்மை மக்கள் கொதிப்படைந்து போயிருக்கிறார்கள்;

'சிறுபான்மை மக்களுக்கு எந்தவிதமான சட்டரீதியான பாதுகாப்பும் தரமாட்டோம்; பெரும்பான்மையினரின் தயவில் அவர்கள் என்றென்றும் வாழவேண்டியவர்களே' என்பதுதான் டாக்டர் கொல்வின் கூற்றில் தொக்கி நிற்கும் உண்மையாகும்;

உலக நாடுகளின் அரசியலமைப்புக்களையெல்லாம் கரைத்துக் குடித்தவர் என்று கருதப்படுபவர் டாக்டர் கொல்வின்.

ரஷியா, யூகோஸ்லேவியா போன்ற சோசலிச நாடுகளிலும் சரி, கனடா போன்ற 'முதலாளித்துவ' நாடுகளிலும் சரி சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு அரசியலமைப்பில் போதிய அளவு சட்டரீதியான பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை டாக்டர் கொல்வின் மறுக்க முடியாது;

சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு சட்டரீதியாக போதிய உத்தரவாதம் அளிக்கப்படாத நாடுகளில்தான் குழப்பங்களும், பூசல்களும், இனக்கலவரங்களும் மூண்டு கொண்டிருக்கின்றன:

இதற்கு உதாரணமாக நம்முடைய இலங்கையே காணப்படுகிறது.

பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனங்களின் உரிமைகளில் கைவைத்துவிட முடியாத அளவுக்கு சோசலிச நாடுகள் பலவற்றில் சட்ட ரீதியான பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால் சோசலிசத்தை நோக்கி சென்றுகொண்டிருப்பதாக கூறப்படும் இலங்கையில்தான் சட்டரீதியாக சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்க முடியாது என்று விசித்திரவாதம் எழுப்பப்படுகிறது.

சிறுபான்மை இனமும், பெரும்பான்மை இனமும் சமத்துவமாக, சமவாய்ப்புடன் வாழுவதற்காகவே உலகின் பல நாடுகளில் சமஷ்டி அரசியலமைப்புமுறை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது;

சமஷ்டி அரசியலமைப்பின் கீழ் ஒரு இனம், இன்னொரு இனத்தின் தயவில் வாழ வேண்டிய சூழ்நிலை ஒருபோதுமே இருக்கமாட்டாது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ்த்தான் பெரும்பான்மையினத்தின் தயவில் சிறுபான்மை இனம் என்றென்றும் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்க நேரிடும்;

இதனால்தான் தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டில் ஒற்றையாட்சி அரசியலமைப்பையே ஏற்க மறுத்துவருகிறார்கள்—

டாக்டர் கொல்வினுக்கு இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் சார்பில் மிகுந்த பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்:—

தமிழினம் இந்நாட்டின் பழம்பெரும் வரலாறு கொண்ட தனி இனம்.

ஒரு சிறுபான்மை இனம் என்று கிள்ளுக்கீரை போல ஒதுக்கப்படக் கூடிய இனமல்ல தமிழினம்.

சிங்களப் பெரும்பான்மையினரின் தயவிலும் நல்லெண்ணத்திலும் மட்டுமே தங்கியிருக்க தன்மானத் தமிழினம் ஒரு போதுமே இணங்காது!

தமிழ்பேசும் இனத்தின் உரிமைகள் அனைத்தும் சட்டபூர்வமாக புதிய அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இப்படிச் செய்யத்தவறினல்—

சிங்களப் பெரும்பான்மையினரின் தயவையும் நல்லெண்ணத்தையும் நம்பி அடிமைகளாக வாழ்வதைவிட தனியே பிரிந்துபோவதையே தமிழினத்தார் விரும்புவார்கள்.

# தமிழர்களுடன் உடன்பாடு காண பிரதமர் முயற்சிக்கிறார்!

## இதற்கு அரசியல் நிர்ணயசபை குறுக்கே நிற்கக் கூடாது!

### தர்மலிங்கம் பா. உ. வலியுறுத்தல்

''தமிழர்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே சமரசமேற்படுத்துவதற்கு பிரதமர் எடுக்கும் முயற்சிகளுக்கு அரசியல் நிர்ணய சபை குறுக்கே நிற்கக் கூடாது. பிரதமருக்கும் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை முன்னணிக் குழுவுக்குமிடையே தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட சில அடிப்படை பிரச்சினைகளையொட்டி பேச்சுவார்த்தை நடைபெற வேண்டியிருக்கிறது. எனவே அதன் பெறுபேறு வரும் வரை அரசியல் நிர்ணயசபையை ஒத்திவைக்க வேண்டும்.''

—இவ்வாறு 14-5-71ல் அ: நி. சபைக் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கோரிப் பேசிய உடுவில் பா: உ: வேண்டுகோள் விடுத்தார்;

அப்போது அவர் கூறியதாவது:—

அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு திருத்தங்கள் தயாரிப்பதற்காக சில காலத்துக்கு முன் நடைபெற்ற தமிழ் கட்சிகளின் மாநாட்டுத் தலைவருக்கு பிரதமரும், நீர்ப்பாசன மின் சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சரும் எழுதிய கடிதங்களை முன்வைத்தும், அத்திருத்தங்கள் சம்பந்தமாக அம்மாநாட்டுத் தலைவரைச் சந்தித்துப் பேசுவதற்கு பிரதமரும், நீர்ப்பாசன மின் சக்தி நெடுஞ்சாலை அமைச்சரும் ஒப்புக்கொண்டிருப்பதாலும் அதற்கு சந்தர்ப்பமளிக்கும் வகையில் இந்தச் சபையை ஒத்திவைக்கவேண்டுமென்று கோருகிறேன். அவ்வாறு இந்த திருத்தங்களைப்பற்றி விவாதித்து முடிவு செய்யாமல்' இச்சபையில் இவை பற்றி விவாதிப்பது நல்லதல்ல என நினைக்கிறேன்;

மூன்ருவது அடிப்படைத் தீர்மானத்துக்கான திருத்தமும் தமிழ்க் கட்சிகளின் மாநாட்டுத் தலைவர் பிரதமருடன் பேசித் தீர்க்கவேண்டிய ஒரு விஷயமாக கொண்டிருந்தார்.

பிரதமருக்கும் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக் குழுவினருக்குமிடையே அந்தப் பேச்சுவார்த்தை இது வரை நடந்திருந்தால் நாங்கள் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். பிரதமர், அரசியலமைப்பு அமைச்சர், மற்றும் அரசாங்கத்தலைவர்களை சந்தித்து விவாதித்திருந்தால் சிக்கலான பல பிரச்சினைகளில் ஏதாவது ஒரு உடன்பாட்டுக்கு நாங்கள் வந்திருக்க முடியும். காலம் வீணுகப் போனுலும், அந்நிலை ஏற்படின் அது நாட்டுக்கு நல்லதல்லவா? வேற்றுமையில் ஒற்றுமை கண்டுதான் ஒரு அரசியல் திட்டம் உருவாக்கப்படவேண்டும்.

அடிப்படைத்தீர்மானங்கள் பற்றி ஆராய்வதற்கு 9.2.71ல் வல்வையில் கூடிய அனைத்துத் தமிழ்க்கட்சிகளின் மாநாட்டுத்தலைவரான திரு: நாகராசாவுக்கு பிரதமராலும் அமைச்சர் மைத்திரிபால சேனுயகாவின் செயலாளராலும் எழுதப்பட்ட இரு கடிதங்களை இச்சபையின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் கூட்டணி, அடிப்படைத் தீர்மானங்களுக்கு சமர்ப்பித்த திருத்தங்கள் பற்றி பிரதமரைச் சந்தித்துப்பேசி சமரசம் காணும் பொறுப்பை திரு: நாகராசாவிடம் ஒப்புவித்திருந்தது. அதனை ஏற்றுக்கொண்ட திரு. நாகராசா இதுபற்றி விவாதிப்பதற்கு பிரதமரைச் சந்திப்பதற்கு ஒரு திகதி குறிப்பிடும்படி கேட்டு பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினுர்.

அதற்கு பிரதமர் எழுதிய பதிலில் அதிக வேலைகாரணமாக தம்மால் சந்திக்க முடியாததற்கு வருந்துவதாகவும் எப்படியென்ருலும் நீர்ப்பாசன அமைச்சரிடம் தாம் கூறியிருப்பதாகவும், அவர் இது சம்பந்தமாக பேட்டியளிப்பாரென்றும் அறிவித்திருக்கிருர். இது 1971ம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி எழுதப்பட்ட கடிதம்.

இதையடுத்து27-4-1971ம் திகதியிட்டு நீர்ப்பாசன அமைச்சரின் அந்தரங்க செயலாளர், திரு. நாகராசாவுக்கு எழுதிய கடிதத்தில், திரு. சேனநாயகா தம்மைச் சந்திப்பதற்கான திகதியை கூடிய விரைவில் தெரிவிப்பார் என்று குறிப்பிட்டிருக்கிருர்; இதுவரை அமைச்சர் தம்மைச் சந்திப்பதற்கான திகதியை திரு: நாகராசாவுக்கு அறிவிக்கவில்லை. இன்றைய நெருக்கடி நிலையில் அமைச்சருக்கு இதற்கு நேரம் ஒதுக்குவதற்கு முடியாமற் போயிருக்கலாம்.

கருத்து முரண்பட்ட பல பிரச்சினைகள் இன்று இருக்கின்றன. இத்தகைய முரண்பாடான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமல் நாங்கள் அரசியல் சட்டத்தை உருவாக்கினுல், அந்த அரசியல் சட்டம் அது எழுதப்படும் கடதாசி அளவுகூட பெறுமதி வாய்ந்ததாக இருக்காது. நாங்கள் முயன்று முடிந்தளவு பல்வேறு பிரச்சினைகளிலும் உடன்பாடு காணவேண்டும். அத்தகைய உடன்பாட்டை இந்தச்சபையிலே விவாதிப்பதின்மூலம் காணமுடியாது. ஏனெனில் இச்சபையிலே பல்வேறு பிரச்சினையிலும் உடன்பாடு காணும் நோக்குடன் அன்றி தத்தமது கட்சி நலன்களை கவனிப்பதிலேயே எல்லோருடைய சித்தையும் செல்கிறது. பிரச்சினைகளை தீர்க்கும் நோக்குடன் நண்பர்களாக மனம்விட்டு பேசக்கூடிய மாநாடு ஒன்றின் மூலமே உடன்பாடு காண முடியும்.

எனவே இந்த அரசியல் நிர்ணயசபை, முரண்பட்ட பிரச்சினைகளில் அனைத்துத் தமிழ்க் கட்சிக்கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் உடன்பாட்டைக் காணுவதற்கு பிரதமர் எடுக்கும் முயற்சிகளை நாசப்படுத்திவிடக்கூடாது.

இங்கு விவாதிக்கப்படவிருக்கும் 3வது அடிப்படைத் தீர்மானத்திற்கான திரு. செல்வநாயகத்தின் பெயரிலுள்ள திருத்தம் வல்வெட்டித்துறையில் அனைத்து தமிழ் கட்சிகளாலும் 8வது தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தமாகும்: இத்திருத்தம் சம்பந்தமாக வல்வை ஒற்றுமைக்குழுவினர் பிரதமருடன் பேசி, சமரச உடன்பாட்டுக்கு வருமுன்னர், இத்திருத்தத்தை விவாதித்து இச்சபை அதை நிராகரித்துவிட்டால், சமாதானமாக பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான சூழ்நிலை மாறிவிடும்.

எனவே திரு: நாகராசாவும், அனைத்துத் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளும் பிரதமரையும், நீர்ப்பாசன அமைச்சரையும் சந்தித்து வல்வை தீர்மானங்கள் பற்றி ஒரு உடன்பாட்டுக்கு வரும் வரை இச்சபை விவாதத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்,

ஆகவே பிரிவினை எண்ணங்கள் தமிழ்பேசும் மக்களிடம் [illegible] வாதங்களை விடுத்து [illegible] உரிமைகளை புதிய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ள அரசியலமைப்பு அமைச்சரும் அரசும் முன்வரவேண்டும்;

## அஸீஸுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியினரும் கூட்டாக வாக்களித்தார்கள்.

இதில் பச்சைத்துரோகம் என்னவென்ருல் அரசாங்கத்தில் சேர்ந்துள்ள தமிழ் காங்கிரஸ் மும்மூர்த்திகள் கூட ஜனுப் அசிசின் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்ததுதான்.

ஜனுப் அசீசின் தீர்மானத்தை முழுக்கமுழுக்க ஆதரித்து வாக்களித்தவர்கள் தமிழரசுப் பிரதிநிதிகளே. ஆதரித்த ஒரேயொரு சிங்களவர் டாக்டர் தகநாயகா.

1952ல் பாராளுமன்றத்தின் முன்னர் இலங்கை இந்திய காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்தபோது தமிழரசுக்கட்சி பா. உ.க்கள் பச்சைத்தண்ணீர் கூடத்தரவில்லையென்றும், மலையகத் தமிழர்பற்றி தமிழரசாருக்கு அக்கறையில்லையென்றும் சில காலத்துக்கு முன்னர் நன்றிகெட்டதனமாகப் பேசிய ஜனுப் அசீஸ் அவர்கள், மலையக மக்கள் மீது உண்மையில் அக்கறையுடையவர்கள் யார் என்பதை இப்போதாவது புரிந்திருப்பார் என்று நம்புகிறோம்.

எப்படித்தான் பந்தம் பிடித்தாலும், சாமரம் வீசினுலும் சிங்களக்கட்சிகள் தங்கள் தமிழ் துவேஷத்தை ஒரு துளியும் கைவிடாது என்பதையும் தமிழ் அரசுக் கட்சியே தமிழர்களின் பிரச்சினைகளில் துணிச்சலுடன் முன்வந்து உரிமைக்காகப் போராடும் ஒரே இயக்கம் என்பதையும் ஜனுப் அசீஸ் இனியேனும் உணர்வாரா? உணர்ந்து திருந்துவாரா என்று தமிழ் மக்கள் கேட்கின்றனர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ் நாட்டின் உரிமைகளுக்குப் போராட எம்முடன் தோளோடுதோள் நிற்பீர்!'

அண்மையில் சென்னையில் நடைபெற்ற தி.மு.க. வெற்றி விழாக்கூட்ட மொன்றில் தமிழக முதல்வர் மு. கருணாநிதி ஆற்றிய உரை இது.

## ராஜாஜி, காமராசர், சுப்பிரமணியத்துக்கு தமிழக முதல்வர் நீட்டும் நேசக் கரம்!

## "மாநில சுயாட்சியை பெறுவதற்கு எத்தனை தொல்லைகளையும் ஏற்கத் தயார்"

"காமராசர் நாகர் கோவிலில் பேசுகையில், மத்திய அரசும் மாநில அரசும் நல்ல முறையில் இயங்க நாங்கள் உறுதுணையாக இருப்போம்" என்ற கருத்துப்படக் . குறிப்பிட்டிருக்கிறார். 'ஆளுகிறவர்களை அயர்ந்து தூங்க விடமாட்டோம்' என்று கூடச் சொல்லியிருக்கிறார்; 'தூங்கிக் கொண்டே ஜெயிப்பேன்' என்று கூறிய காமராசர், 'இவர்களைத் தூங்க விடமாட்டேன்' என்று கூறுகிறாரென்றால், உள்ளபடியே நாம் அதற்காகப் பெருமையடைய வேண்டும்.

தூங்கினால் எழுப்ப நம் வீட்டில் யார் யாரோ இருக்கிறார்கள்; காமராசரே நம்மை எழுப்ப வருகிறாரென்றால், அது நாம் செய்த தவப்பயனல்லவா? அந்த அளவுக்குக் காமராசர் இன்று கீழே இறங்கிவந்து, 'இவர்களைத் தூங்கவிடமாட்டேன், என்று கூறுகிறார்! அப்படி அவர் சொல்வதற்காக மகிழ்ச்சியடைகிறேன்; அப்படிப்பட்ட ஒரு பெரியவருடைய கண்காணிப்பு எப்போதும் நமக்கு இருக்கவேண்டும்; நான் அதை விரும்புகிறேன்; தி.மு.கழகமும் முன்னணித் தலைவர்களும் தொண்டர்களும் அதைத்தான் விரும்புகிறார்கள்.

குறையிருந்தால் சுட்டிக் காட்டுங்கள் — திருத்திக் கொள்ளுகிறோம்; குற்றங்கள் இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள்—திருத்திக் கொள்ளுகிறோம்—— இதைப் பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறோம்; அதற்கேற்றவாறு நாம் நடந்தும் காட்டியிருக்கிறோம்.

காமராசரும்— சுப்பிரமணியமும் ஒரே விதமாகப் பேசியிருக்கிறார்கள்; 'எதற்கெடுத்தாலும் இவர்கள் மத்திய அரசைக் காட்டி நல்ல காரியம் செய்யமாட்டார்கள்' என்று காமராசர் சொல்லியிருக்கிறார்; சி. சுப்பிரமணியம் அதைவிட ஒரு படி மேலே போய்——சென்னை கண்ணப்பர் திடலில் பேசும்போது—'மத்திய அரசு அதிகாரங்களைத் தரவில்லை; ஆகவே நன்மை செய்யவில்லை—என்று இவர்கள் சொன்னால், மக்கள் சும்மா விடமாட்டார்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எங்களால் இயன்ற அளவுக்கு—எங்கள் சக்திக்கேற்ப முடிந்தவரை— மக்களுக்குத் தொண்டு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சுப்பிரமணியத்திற்குச் சுட்டிக்காட்டுகிறேன்—காமராசருக்கு பணிவன்போடு நினைவுபடுத்துகிறேன்— மத்திய அரசின் சார்பில் நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டுத் தேர்தலுக்கு நின்ற இந்திரா காந்தி அம்மையார், 'ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைக்க அரசியல் சட்டத்தைத் திருத்துவோம்; அதற்குத்தான் இன்று மக்களிடம் ஆதரவு திரட்ட வந்திருக்கிறோம்' என்று சொன்னார்கள் என்பதை!

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயமென்றால், ஒருவன் ஏழை—ஒருவன் பணக்காரன் —என்ற பேத உணர்ச்சி இருக்கக்கூடாது! இருவருக்கும் சமமான வாழ்வு வேண்டும்—சமமான சுகம் வேண்டும்—இன்பம் வேண்டும் —இதுதான் ஏற்றத்தாழ்வற்ற சமதர்மத்திற்கு இலக்கணம்!

மனிதனுக்கு மாத்திரம் தான் ஏற்றத்தாழ்வா? மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்கும் தேவையில்லையா?

ஏற்றத்தாழ்வற்ற நிலை, மாநிலத்திற்கும் தேவை; ஒரு மாநிலத்திற்கும்—இன்னொரு மாநிலத்திற்கும் இடையில் ஏற்றத்தாழ்வு இருக்கலாமா?

ரூ. 800 கோடியை நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படாத தனி நிதியாக—துணை நிதியாக ஒதுக்கிவிட்டு, அந்தச் சிறப்பு நிதியில் தமிழ்நாட்டிற்குப் பங்கில்லை என்றால், இது ஏற்றத்தாழ்வு அல்லவா? அது இருக்கலாமா?—இதைத்தான் தி.மு. கழகம் கேட்கிறது.

அதற்கு நம்மோடு சேர்ந்து குரல் கொடுக்க காமராசரை அழைக்கிறேன்; நம்முடைய குரலை இந்திரா அம்மையாரிடம் எடுத்துச் சொல்ல சுப்பிரமணியத்தையும் கூப்பிடுகிறேன்; இரண்டையும் அவர்கள் புரிந்துகொண்டாக வேண்டும்.

'மத்திய அரசைக் காட்டி விட்டு, இவர்கள் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்' என்று இவர்கள் மக்களிடம் சொல்ல நினைத்தால், அது அரசியல் பிரசாரத்திற்குச் சுவையாக இருக்கலாம்; ஆனால் உண்மையை உணர்ந்தாக வேண்டுமல்லவா?

தமிழ்நாட்டின் முதலமைச்சராகக் காமராசர் இருந்த போது— பக்தவத்சலம் இருந்தபோது தி.மு. கழகம், சட்டமன்றதிலும்—மக்கள் மன்றத்திலும், 'மத்திய அரசுடன் போராடி அதிகப் பணத்தைத் தமிழ்நாட்டுத் திட்டங்களுக்காக வாங்குங்கள்; அதற்கு நாங்கள் உங்களோடு இருக்கிறோம்' என்று சொன்னது மட்டுமல்ல— காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட அண்ணா அவர்கள், 'தமிழ்நாட்டுத் திட்டங்களுக்காக மத்திய அரசிடம் ரூ. 2,000 கோடி பெறுவீர்களானால், தி.மு கழகம் தேர்தலிலிருந்து ஒதுங்கிக்கொண்டு உங்கள் பின்னால் வரத் தயாராக இருக்கிறது' என்று சொன்னார்கள்.

நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில், 'இந்த மாநிலத்தின் நன்மைகளுக்காக மத்திய அரசுடன் போராடிப் பணத்தைப் பெறுங்கள்' என்று சொல்கின்ற வகையில், 'இங்கே முன்பு இருந்த அரசின் பக்கம் நாங்கள் இருந்திருக்கிறோம்; அதைத்தான் நாங்கள் இப்போது நினைவுபடுத்துகிறோம்!

மத்திய அரசு நம் உரிமைகளைப் பறிக்குமானால்—உதவிகளைத் தராமல் மறுக்குமானால்—அந்த நேரத்தில் காமராசருடைய காங்கிரசானாலும், தமிழ்நாட்டிலிருக்கின்ற இந்திரா காங்கிரசுக் கட்சியானாலும், 'இந்த மாநிலத்தின் தேவை' என்கின்ற அடிப்படையில் கழக அரசின் பின்னால் இருந்து உரிமைகளுக்காகப் போராடும் தன்மையில் நாட்டைச் செலுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் போதாத காலமோ—நல்லகாலமோ தெரியாது; இந்திய அளவில் காங்கிரசுக் கட்சி சிண்டிகேட்டாகவும்—இண்டிகேட்டாகவும் இரண்டாகப் பிரிந்திருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள இண்டிகேட் காங்கிரசிலோ, 'பக்தவத்சலம் காங்கிரசு' என்றும், 'சுப்பிரமணியம் காங்கிரசு' என்றும், இரண்டாகி இருக்கிறது!

காமராசர் காங்கிரசிலோ, 'சபைக்கு வரும் காங்கிரசு' என்றும், 'சந்தேகப்படும் காங்கிரசு' என்றும் இரண்டாகப் பிரிந்திருக்கிறது!

நீங்கள், நான்காக—ஐந்தாக—நாற்பதாக ஆனாலும் நாங்கள் கவலைப்படவில்லை; ஏனென்றால், அகில இந்திய காங்கிரசுக் கட்சி இரண்டுபட்டபோதே நான்— 'கழகத் தலைவர்' என்ற முறையில், 'ஒன்றாக இருங்கள் — வலிமையாக இருங்கள்—சனநாயகத்திற்கு ஊறுவராமல் ஒன்று பட்டு இருங்கள்' என்று கேட்டுக் கொண்டேன்; அவர்கள் கேட்க மறுத்தார்கள்—நான்காக ஆனார்கள்!

அவர்கள் எத்தனை ஆனாலும், 'தமிழ்நாட்டின் உரிமைகளை மத்திய அரசிடம் கேட்கும்போது எங்களோடு ஒன்றாக இருக்கவேண்டும்' என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய உணர்வுகளுக்காக—உரிமைகளுக்காக நாம் பாடுபட்டாக வேண்டும்! நம்முடைய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் தான் அதிகமான காரியங்களைச் செய்யமுடியும்!

மாநில அளவில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கி வேலை வாய்ப்பை அளிப்பதென்றால், நிதி நிலை—அதிகாரங்களைப் பயன்படுத்தித் தான் அவற்றைக் செய்ய முடியும்!

வரவு — செலவுத் திட்டக் கணக்குப்படி, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 300 கோடி வருமானம் வந்தால், அதில் வேலை வாய்ப்புக்காக ரூ. 30 கோடி மட்டும்தான் ஒதுக்க முடியும்; இதை உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன்.

அதைப்போலவே, வேலை வாய்ப்பு அளிக்கத் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டுமென்றால் முடியுமா? அதிகாரம் இருக்கிறதா?

இந்த ஆண்டு 140 தொழிற்சாலைகளுக்கு லைசென்சு வேண்டுமென்று மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம்; இதுவரை கிடைத்திருப்பது 36 தொழிற்சாலைக்குத்தான்; காரணம்; லைசென்சு வழங்குகிற உரிமை அங்கே இருக்கிறது!

அதைக் கேட்டால், 'கொடுக்காதீர்கள்' என்று சொல்லி—அதற்குத் தடைக் கல்லாகவும் இருக்கிறார் இராஜாஜி-'எந்த இராஜாஜி தமது சனநாயகம்' என்ற புத்தகத்தில், 'மாநில அரசுக்கு எல்லா அதிகாரங்களும் தரப்பட வேண்டும்; மத்திய அரசில் இரண்டு மூன்று அதிகாரங்களைத்தான் வைத்துக்கொள்ள வேண்டும்; மற்ற அதிகாரங்களெல்லாம் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டும்' என்று ஒருகாலத்தில் எழுதிய இராஜாஜிதான்! நாம் அதிகாரங்களைக் கேட்கி

(10-ம் பக்கம் பார்க்க)

# மனச்சாட்சிக்கு பயந்து நடப்பவனே நடமாடும் கோவில்!

## கலைஞர் கருணாநிதி கூறுகிறார்!

திருக்கழுக்குன்றத்தில் அமைந்திருக்கின்ற இந்த ஆலயம் மிகுந்த தொன்மை வாய்ந்த ஆலயம். வான்முட்ட உயர்ந்திருக்கின்ற கோபுரங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இங்கே அமைந்துள்ள அறங்காவலர் குழுவினர் முயற்சி எடுத்துக் கொண்டு அதற்காக 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இந்தத் திருப்பணிகள் தொடங்கியிருக்கின்றன.

பழமை வாய்ந்த ஐந்து கோபுரங்களையும் குன்றில் அமைந்துள்ள கோயில் குளங்களைப் பழுது பார்த்தலுமாகிய ஏறத்தாழ 10 திருப்பணிகள் இதில் அடங்கியுள்ளன.

தெய்வீகப் பேரவையில் எல்லாப் பண்டார சந்நிதிகளும் கூடி எனக்கு வரவேற்பளித்தபோது 'கடவுளை ஏற்றுக் கொள்ளாதவர் கருணாநிதி என்று நினைத்தோம். ஆனால் அவர் ஆட்சிக்கு வந்த பிறகு கடவுள் திருப்பணிகளைத் தடை செய்யவில்லை,' என்று பேசினார்கள்.

அப்போது தான் சொன்னேன், கடவுளை நாம் ஏற்கிறோமா என்பதல்ல—கடவுள் நம்மை ஏற்கிறாரா என்பதைத்தான் பார்க்க வேண்டும் என்றேன்.

விபூதியைப் பூசிக்கொள்வது மாத்திரமல்ல, (அப்படிச் சொல்வதால் விபூதி பூசுகிறவர்களைக் குறை சொல்லவில்லை) விபூதி பூசுவதால் மட்டும் கடவுள் எம்மை ஏற்றுக்கொள்வாரா என்றால்—இல்லை.

தாகூர் 'ஏழை சிரிப்பில் இறைவன் இருக்கிறான்' என்றார்; அதையேதான் அண்ணா தமிழ் நாட்டில் எடுத்துச் சொன்னார். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காண்போம்' என்றார். அந்த இறைவன்தான் உண்மையான இறைவன்!

இங்கே கூட 'மாநில சுயாட்சி அமைந்திட இறைவன் அருள் புரிவானாக' என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

இறைவனென்றால் இந்த வேதகிரீசுவரர் மட்டும்தான் இறைவனா என்றால் இல்லை.

எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்பது பழமொழி— எழுத்தறிவிப்பவர் யார்? ஆசிரியர்கள். அப்படியானால் அவர்களும் இறைவனுவார்கள்.

ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான் என்றார் தாகூர். இங்கே ஏழைகளெல்லாம் கூடியிருக்கிறீர்கள்; நீங்களெல்லாம் இறைவன் தான்.

### இறைவன் யார்?

இறைவன் யார்? இறைவன் இல்லாதவன் யார்? எல்லோருக்கும் கடவுள்கள் தான் நல்லது செய்வது. கடவுள் என்றால் நல்லது செய்கிறவர்களெல்லாம் கடவுள் தான்!

நம்முடைய மனச்சாட்சி தான் நமக்குக் கடவுள்!

### மனசாட்சிதான் ஒப்பற்ற நீதிபதி!

தவறு செய்கிறோமா இல்லையா என்பதை ஒரு நீதிபதி பலநாள் வக்கீல் வாதத்தை வைத்து கண்டு பிடிப்பதை விட—உளநூல் ஆராய்ச்சிக்காரர் விஞ்ஞான மகிமையால் தவறு செய்கிறோமா இல்லையா என்று கண்டுபிடிப்பதைவிட — தவறு செய்கிறோமா இல்லையா என்பதை சொல்கிற ஒப்பற்ற நீதிபதி உண்டென்றால் அது மனசாட்சிதான்!

ஆகவே அந்த மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து கொண்டால் நாமம் தரித்தாலும், தரிக்கா விட்டாலும்—விபூதி பூசினாலும் பூசாவிட்டாலும்— உண்டியலில் பணம்போட்டாலும் போடா விட்டாலும்— மொட்டை அடித்துக் கொண்டாலும் இல்லா விட்டாலும்-ருத்ராட்சம் அணிந்தாலும்—துளசி மணி மாலை போட்டாலும் போடா விட்டாலும்—காவியாடை உடுத்தினாலும் உடுத்தா விட்டாலும்—கமண்டலத்தை கையில் ஏந்தினாலும் ஏந்தா விட்டாலும் மனசாட்சிக்குப் பயந்து நடக்கிற மனிதன் தான் ஆண்டவன்!

அவனைத்தான் நடமாடும் கோயில் என்கிறார்கள்.

அதே நேரத்தில் சில பற்றுக்கோடுகள் நம்பிக்கைகள் உண்டு. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சிலர் இருப்பார்களானால் அவர்கள் நம்பிக்கைக்கு மாறாக இந்த அரசு என்றைக்கும் அவர்களைத்தடைபடுத்தாது.

உதாரணம் சொல்ல வேண்டுமானால் கும்பகோணம் மகாமகம்—வைத்தீஸ்வரன் கோவில் கும்பாபி

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர் போக்கில் அதிருப்தி ஏற்பட அமைச்சர் பதியுதீனும் குமாரசூரியருமே காரணம்!

ஏப்ரில் மாத ஆரம்பத்திலே பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் நாட்டிலே குழப்பங்களை ஏற்படுத்தும் பொழுது நாட்டு மக்களின் மனத்திலே எவ்வித எண்ணம் இருந்தது என்பதை நான் கூறத்தேவையில்லை; ஓர் ஆண்டுக்கு முன்னர் இந்த அரசாங்கத்தின் பிரகடனங்களைப் பூரணமாக ஏற்று, அரசாங்கத்தின் திட்டங்களைப் பரிபூரணமாக ஆதரிக்கின்றோம் என்று திட்டவட்டமாக அறிவித்தவர்களுக் இடையில் இந்தக் குறுகிய காலத்திற்குள் ஏன் வெறுப்பு ஏற்பட வேண்டும்? அவர்கள் மத்தியிலே மன ஏமாற்றம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராயும்பொழுது அரசாங்கத்தின் பகிரங்கக் கொள்கைகளை அவர்கள் எந்தக் காலத்திலும் எதிர்த்ததாகவோ வெறுத்ததாகவோ இல்லை.

ஆனால் ஒரு சில அமைச்சர்களின் நடவடிக்கைகளின் காரணமாகத்தான் மக்கள் மனத்திலே வெறுப்பு ஏற்பட்டதென்பதை எவரும் மறுக்க முடியாது; மக்கள் மத்தியிலே-இந்த அரசாங்கத்தை ஆதிக்கத்துக்குக் கொண்டு வந்த இளைஞர்கள் மத்தியிலே-இந்த நிலைமை ஏற்படுவதற்கு முதலாவது குற்றவாளிகள் அமைச்சர் சபையிலே இருக்கும் ஒருவர் இருவர் என்பதை எவருமே மறுக்க முடியாதவாறு சம்பவங்கள் சென்ற ஒரு வருட காலமாக நடந்து கொண்டு வந்திருக்கின்றன.

## கல்வி அமைச்சரின் தவறு!

இதிலே மிகப் பெரிய குற்றவாளி கல்வி அமைச்சர் என்பதை நாடு அறியும்: அரசாங்கம் அமைத்ததற்குப் பிறகு "பட்டதாரிகள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போம்; அவர்களுக்கு வேலை கொடுப்போம்" என்று அரசாங்கம் அறிவித்தது. பல காலமாக வேலையில்லாமல் கஷ்டப்பட்ட இளம் பட்டதாரிகள் இந்தத் திட்டத்தை வரவேற்றார்கள் ஆனால் 2,500 பட்டதாரிகளுக்கு வேலை வசதிகள் கொடுக்கும் பொழுது என்ன நடந்தது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்,

சென்ற ஆறு மாத காலமாக எந்தப் பொது இடத்திலே நாங்கள் இருந்தாலும், பஸ் வண்டியிலே என்றாலென்ன, புவைண்டியிலே என்றாலென்ன, வேறு எந்தப் பொது இடத்திலே என்றாலென்ன, கல்வி அமைச்சர் பட்டதாரிகள் நியமனத்திலே அநீதி விளைவிக்கிறார் என்றே கதைத்துக் கொண்டிருந்தார்கள். அநீதியான முறையிலே, தகுதி பாராமல் பாரபட்சமாக நியமனங்கள் கொடுப்பது அரசாங்கத்தின் கொள்கை என்றால் அதை நாங்கள் இவ்வளவு தூரம் கண்டிக்க மாட்டோம்.

## அரசின் கொள்கை

அரசாங்கத்தின் கொள்கை நீதியாக நடப்பது. அரசாங்கத்தின் கொள்கை பாரபட்சமில்லாமல் நடப்பது; அரசாங்கத்தின் கொள்கை இளைஞர்களுக்கு வேலை வசதி கொடுக்கும் பொழுது தகுதி அடிப்படையிலே கொடுப்பது: அந்தக்கொள்கையின் படிதான் பிரதமர் அவர்கள் பட்டதாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்த பொழுது இவன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவன்' எந்த மொழியைப் பேசுகிறான் என்று ஆராயவில்லை: நாடு முழுவதற்கும் ஒரு பொதுத் திட்டத்தைத் தயாரித்தார்; இந்தத் திட்டத்தின்படிதான் நான் நியமனம் கொடுக்கப் போகிறேன் என்று நாட்டுக்கு அறிவித்தார். ஒவ்வொரு நாடாளுமன்ற அங்கத்தவருக்கும் அந்தத் திட்டத்தை அறிவித்தார். அந்தத் திட்டத்தின் கீழ் நியமனம் கொடுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் கீழ் நியமனம் பெறாத பட்ட தாரிகளே அரசாங்கத்தை எவ்வளவோ தூரம் பாராட்டக்கூடிய அளவிலே நியமனம் நடந்தது; இது தான் அரசாங்கத்தின் கொள்கை.

> அரியணை உரை மீதான விவாதத்தில் சாவகச்சேரி பா. உ. திரு. வ. ந. நவரத்தினம் ஆற்றிய உரை முழுவதும் இங்கு இடம் பெற்றுள்ளது.

பொது நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அரசாங்க எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்களைச் சேர்க்கும் பொழுது இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 40 புள்ளிகள் கொடு; இந்த மொழியைப் பேசுகிறவர்களுக்கு 50 புள்ளிகள் கூடக் கொடு என்று சொல்லவில்லை. அரசாங்க இலிகிதர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள் என்று பொது விளம்பரம் மூலம் கூறினார்; எந்தவிதமான வித்தியாசமும் காட்டமாட்டோம் என்று அறிவித்தார். அவரும் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்தான்; அவர் அரசாங்கத்தின் கொள்கைப்படி நியமனம் செய்தார். 50,000 க்கு மேற்பட்ட இளைஞர்கள் விண்ணப்பம் செய்தார்கள்: 1,000 பேர்களுக்கு மேல் நியமனம் கிடைக்கவில்லை: எனினும் மிகுதியான 49,000 பேர்களும் திருப்தியுடன் இருக்கிறார்கள்: "தகுதியானவன் எடுபட்டான்; திட்டத்துக்குக் கீழ் அமையாத நாங்கள் வெளியிலே இருக்கிறோம்" என்று அரசாங்கத்தைப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

## அநீதியான நியமனங்கள்!

ஆனால் பட்டதாரிகள் நியமனத்தில் என்ன நடந்தது? எவ்வளவோ உயர்ந்த தரம் பெற்ற பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்க இலங்கைச் சர்வகலாசாலையிலே படித்துப் பட்டப் பரீட்சைகளில் வகுப்புடன் சித்தியெய்திய இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்க அணுவின் அடிப்படையிலே, வேறு என்ன காரணத்துக்கோ எனக்குத் தெரியாது, தகுதியற்றவர்கள் நியமிக்கப்படும் பொழுது மிகுதியான பட்டதாரிகளின் மனநிலை எப்படி இருக்கும்? நாம் ஆதரித்த அரசாங்கம் இவ்வளவு அநீதி செய்து விட்டதே என்று கொதித்து எழுந்தார்கள்;

வட்டார வித்தியாதரிசிகள் நியமனம் நடந்தது: எத்தனையோ பேர் விண்ணப்பம் செய்தார்கள்; ஆனால் நியமிக்கப்பட்டவர்கள் யார்? அவர்கள் தகுதியின்படி நியமிக்கப்படவில்லை: அனுபவத்தின்படி நியமிக்கப்படவில்லை; யாழ்ப்பாணத்திலே தமிழ் மக்கள் மத்தியிலே இருந்து நியமிக்கப்பட்ட மூன்று வட்டார வித்தியாதரிசிகளை எடுத்துப்பார்க்கும் பொழுது எவ்வளவோ தகுதியான எவ்வளவோ அனுபவமுள்ள, கட்டாயமாக நியமிக்க வேண்டியவர்களை நியமிக்காத பட்சத்திலே, அந்த நியமனம் பெறாத ஆசிரியர்கள் பாடசாலைகளிலே என்ன செய்வார்கள்?

இந்த அரசாங்கத்திற்கு எதிராகப் பாடசாலையில் கல்வி கற்கின்ற பிள்ளைகளின் மனத்தைத் திருப்புவது இன்று ஒரு சாதாரண விடயமாகி விட்டது. ஒரு தனிப்பட்ட அமைச்சர் செய்கின்ற அநீதிகளுக்கு மாணவர்கள் இந்த அரசாங்கத்தை எதிர்க்கக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறார்கள்.

தனிப்பட்ட முறையிலே தமிழ் மாணவர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட அநீதியைப் பற்றி நான் இங்கே சொல்ல வரவில்லை: சர்வகலாசாலை அனுமதி விடயத்திலே அவர் செய்த சட்டவிரோதமான செயல்களைப்பற்றி நான் இங்கு சொல்லவில்லை: பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அனுமதி விடயத்திலே செய்த அநீதியைப் பற்றி நான் இங்கே கூறவில்லை. பொதுவாக தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு எதிராகச் செய்த பொது அநீதியைப் பற்றியே நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்;

### சட்டத்தை மீறும் தபால் அமைச்சர்

அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறான இத்தகைய விடயங்கள் ஜனநாயக கோட்பாடுகளுக்கப்பால் இங்கே கொண்டுவரப்பட்டவர்களால்தான் செய்யப்படுகின்றன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற அங்கத்தவர் அமைச்சராக இருந்தால், 'நான் இன்று அநீதியைச் செய்தால் ஐந்து வருடங்களுக்குப் பின்னர் வீடு வீடாகப் போய் வாக்குகளைச் சேகரிக்கின்ற பொழுது மக்கள் அந்த அநீயைச் சுட்டிக் காட்டுவார்களே, ஆகவே நான் அநீதி செய்யக்கூடாது' என்றாவது நினைப்பார்: ஆனால், மக்களின் வாக்குகளைப் பெறப் பயந்து மக்களின் வாக்குகளாலே இங்கு வரமுடியாதவர்கள் தான் இப்படிப்பட்ட அநீதிகளை செய்கிறார்கள்; மேல் சபையிலே இருக்கின்றார் தபால் அமைச்சர். அவர் நாட்டிலேயிருக்கின்ற சட்டத்தை மீறி, கொள்கைகளை மீறி, நியாயத்தை மீறி நடக்கின்றார். இந்த அரசாங்கம் செய்யும் அநீதிகளுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்கிறார்களென்பதற்கு நானும் ஒரு சில உதாரணங்களைச் செல்லி வைக்க விரும்புகிறேன்; 'நான் அமைச்சராக வந்து விட்டேன்; எனக்கு அதிகாரம் இருக்கிறது; நான் செய்ய எண்ணியதைச் செய்தேதீருவேன்' என்று ஒரு சில அமைச்சர்கள் நடக்கின்றார்கள். எல்லா அமைச்சர்களும் அப்படி நடக்கின்றார்கள் என்று நான் கூறவில்லை; ஒரு சில அமைச்சர்கள் தான் அப்படி நடக்கின்றார்கள். அதுவும் மக்களின் ஆதரவு இல்லாமல் அமைச்சர்களாக வந்தவர்கள் தான் இந்தவிதமான அநீதிகளைச் செய்கின்றார்களென்று நான் மிகவும் வெட்கத்துடன் சொல்லவேண்டியிருக்கின்றது

## ஆதரவு பறிபோகிறது!

சிறுபான்மைச் சமூகத்தின் பிரதிநிதியென்ற வகையில் அமைச்சரவையில் இருக்கின்ற தபால் அமைச்சரவர்கள் நாட்டிலே செய்த அநீதிக்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன்: இந்த உராரணத்திலேயிருந்து இத்தகையவர்களின் செயல்களால் நாடு முழுவதிலும் அரசாங்கத்துக்கு இருக்கின்ற ஆதரவு எவ்வாறு பறிபோகிறதென்பதைக் காணமுடியும். கைதடி உப தபால் நிலைய அதிபருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அந்த உப தபால் கந்தோரில் நான்கு வருடங்களுக்கு மேலாக பதில் உப தபால் அதிபராக கடமையாற்றியவரும் இப்பதவிக்கு விண்ணப்பம் செய்தார். இன்னும் பலரும் விண்ணப்பங்களை அனுப்பினார்கள் நேர்முகப் பரீட்சை முடிந்து தெரிவு அறிவிப்பதற்கு முன்னர், சாவகச்சேரியில் நடந்த ஒரு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்திலே அந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்று சொல்லுகின்ற ஒருவரை அறிமுகப்படுத்தி இவர்தான் வருங்காலக் கைதடி உப தபால் கந்தோர் அதிபர் என்று அவரை அறிமுகப் படுத்தினார்கள். எல்லோருக்கும் ஆச்சரியமா இருந்தது.

எத்தனையோ தகுதியானவர்கள் விண்ணப்பங்கள் செய்திருந்த நேரத்திலே இவருக்கு இப்பதவி எப்படிக் கிடைக்குமென்று எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள்; ஆராய்ந்து பார்த்தார்கள். ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது இவ்வுபதபால் நிலைய அதிபர் பதவிக்கு விண்ணப்பம் செய்கின்றவர்கள், அப்பகுதி எல்லைக்குள் பத்து வருடங்களுக்கு மேல் வசித்துள்ளவராக இருக்கவேண்டுமென்று ஒரு விதி இருந்தது. அவர்கள் ஆராய்ந்து பார்த்தபொழுது, அந்தக் குறிப்பிட்ட நபர் அவ்வுபதபால் கந்தோர் பகுதி எல்லைக்குள் இரண்டு வருடங்களுக்கு மேல் வசிக்கவில்லையென்ற அத்தாட்சியை எடுத்தார்கள். வாக்காளர் இடாப்பு மூலமும் அரிசிப்பங்கீட்டு இடாப்பு மூலமும் பெற்ற



அத்தாட்சிகளையும் இன்னும் பல அத்தாட்சிகளையும் எடுத்துக்காட்டி, அவருக்கு விண்ணப்பம் செய்யத் தகுதியில்லையென்று எனக்கு எடுத்துக் கூறினார்கள். நான் உடனடியாக இந்த முறைப்பாட்டை போஸ்மாஸ்டர் ஜெனரலுக்கு அறிவித்தேன். 'இவருக்கு தகுதி இல்லை; தகுதி இல்லையென்பதற்கு இதோ அத்தாட்சி, இன்னும் ஆதாரம் தேவையென்றால் தரமுடியும்' என்று கூறினேன்: ஆனால் இரண்டு வாரங்களுக்குப் பின் அதே நபருக்கு நியமனம் கொடுக்கப்பட்டது.

### விசேட உத்தரவு

அதன் பின்னர் ஏனைய விண்ணப்பக்காரர்கள் அரசாங்க சேவை ஆணைக் குழுவுக்கு மனு அனுப்பினார்கள். அதிலே, தெரிவு செய்யப்பட்ட நபருக்குத் தகுதியில்லை, அவர் பத்து வருடங்கள் அந்தப் பிரதேசத்தில் வசிக்கவில்லை. அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் கூறினார்கள். சாதரணமாக, ஒரு நியமனத்துக்கு எதிராக அரசாங்க ஆணைக்குழுவுக்கு மனு அனுப்பினால் அந்த நியமனம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும். ஆனால், குறிப்பிட்ட நியமனம் நிறுத்திவைக்கப்படவில்லை.

இதுபற்றி அரசாங்க சேவை ஆணைக்குழு அதிபரைக் கேட்டேன். அதற்கு அவர்,

# அரசாங்க நியமனங்களில் நடைபெற்ற ஊழல்கள் முறைகேடுகள் தாம் எத்தனை?

## நாடாளுமன்றத்தில் நவம் கண்டனம்!

"நியமனம் கட்டாயமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்க வேண்டும், இது சாதாரணமாகத் தெரிந்த விஷயம்" என்று கூறினார்: அத்துடன், அதுபற்றித் தபால் தலைமை அதிபரைக் கேட்குமாறும் கூறினார். தபால் தலைமை அதிபரை கேட்ட பொழுது, "அரசாங்க சேவை ஆணைக் குழுவுக்கு ஒரு நியமனம் பற்றி மனுச் செய்தால் இதுவரை காலமும் அந்த நியமனத்தை நிறுத்தி வைத்து வந்திருக்கிறோம். ஆனால், இந்தமுறை அமைச்சின் விசேஷ உத்தரவின் படி அந்த நியமனத்தை நிறுத்தி வைக்கவில்லை" என்று கூறினார்.

### வெறுப்புக்குக் காரணம்

இந்த நாட்டில் நீதி எங்கே, நியாயம் எங்கே என்று கேட்கிறேன். மக்கள் கொந்தளித்து எழுவதற்கு வேறு காரணங்களும் தேவையா? இன்னும் ஒரு விண்ணப்பதாரர், இந்த நியமனத்தைத் தற்காலிகமாக நிற்பாட்டிவைப்பதற்காக சுப்ரீம் கோட்டுக்கு ஐந்தாம் தேதி மனு தாக்கல் செய்தார். புது நியமனம் கொடுக்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தி: வாசுகி,
பண்ணாகம்;

கே: வட்டுக்கோட்டையில் இனித் தேர்தல் நடைபெற்றால்...?

ப: 'பனி' தொலையும்-ஒளி பரவும்!

கே: வட்டுக்கோட்டை எம். பி. இப்போது யாது செய்கிறார்?

ப: அரை மந்திரி பதவி கூட கிடைக்கவில்லையே என்று கொட்டாவி விடுகிறாராம்!

கே: பயங்கரவாதிகளின் ஆர்ப்பாட்டம் என்ன காரணத்தால் ஏற்பட்டது?

ப: இதற்கு இன்றைய சூழ்நிலையில் பதில் சொல்வது சாத்தியமில்லை!

ஃ

சி. சிவதாஸ்,
தொண்டைமானாறு:

கே: ஒற்றுமை முயற்சி ஒருக்காலும் உருப்படாது என்று அருளம்பலம் கூறிய தன் மர்மம் என்ன?

ப: 'ஒற்றுமைக்கு வேட்டு வைக்க இதோ நாங்கள் முக்காலிகள் தயாராக இருக்கிறோம்' என்பது தான்!

ஃ

ராஜசேகரம்,
யாழ்ப்பாணம்;

கே: அரசியல் நிர்ணய சபையில் தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தை தாங்கள் பகிஷ்கரித்து விட்டதாக சிமோல் அருளம்பலம் கூறியபோது ஆளுங்கட்சியினர் ஆரவாரித்தனராமே!

ப: எட்டப்பன், கட்டபொம்மனை திட்டியபோது வெள்ளைக்கார அதிகாரிகளும் இப்படித்தான் கரகோஷம் செய்தனராம்!

கே: தமிழ்க் கட்சிகளின் வல்வைக் கூட்டத்தில் தமது கட்சி கலந்துகொள்ளவில்லையென்று அருளம்பலம் கூறியிருக்கிறாரே...!

ப: அருளம்பலத்தின் கட்சி எது வென்பது நமக்கு தெரியாது; ஆனால் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மு. சிவசிதம்பரம், தா; சங்கரப்பிள்ளை, ந. நடராசா, தா. குணரத்தினம், ந. சிவனேசன், தி. பரமானந்தராசா ஆகியோர் கலந்து கொண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றனர்!

ஃ

சி. நடராசா,
மீசாலை.

கே: சிறிமாவோ அம்மையார் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டால்...?

ப: உலகின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெயரைத் தட்டிக் கொண்டு விடுவார்!

கே: எம்; சி: சுப்பிரமணியத்துக்கு மந்திரி பதவி கிடைத்திருந்தால்...?

ப: 'மந்திரி' பதவிக்குரிய மதிப்பு காற்றில் பறந்திருக்கும்!

ஃ

தா: தம்பிப்பிள்ளை,
உப்போடை:

கே: தாங்கள் கேட்பதை விட கூடுதலான நன்மைகளை அரசு தரும் என்கிறதே வட்டுக்கோட்டைக் காவடி! அப்படி எதைத் தந்து விட்டது!

ப: ஏன், வட்டுக்கோட்டைக் காவடியின் மருமகனுக்கு உத்தியோகம் தந்து விட்டதே!

ஃ

இ: பொ: ஜெயபாலன்,
சங்கானை;

கே: சிறிமா அரசாங்கம் பாட்டாளிகளின் நன்மைக்காக பாடுபடும் என்று நினைக்கிறீர்களா?

ப: நான் நினைப்பதை கூறுவதற்கு தணிக்கை அதிகாரிகள் இடம் தர மாட்டார்களே!

கே: அஹிம்சைப் பாதையால் பயனில்லை என்பதை தமிழரசு எப்போது உணரும்?

ப: அஹிம்சைக் கொள்கையால் பயனில்லை என்ற கருத்தை தமிழரசுக் கட்சி ஒரு போதும் ஏற்காது!

ஃ

இ: சு: ஆனந்தகௌரி,
முரசுமோட்டை;

கே: தனிப் பெருந் தலைவர் இலங்கை வந்ததும் அருளம்பலம், தியாகு, சங்கரி மூவரும் சொல்வதை ஏற்பார் என்று நான் கூறுகிறேன் தங்கள் கருத்து என்ன?

ப: மு. சிவசிதம்பரம், சங்கரப்பிள்ளை, குமார் பொன்னம்பலம், திருமதி; பொன்னம்பலம், சிவனேசன், குணரத்தினம் போன்ற பலரது கருத்துக்களையும், நிராகரித்து விடுவார் என்று நம்புகிறீர்களா?

ஃ

எம்; பொன்னுத்துரை,
மட்டக்களப்பு;

கே: எங்களுடைய மட்டு நகர் முதல்வர் திருவாளர் செ; இராசதுரை அவர்கள் [illegible] [illegible] றவும் பாலம் கட்டுவதற்கான அத்திவாரக்கல் சம்பந்தப்பட்ட மந்திரியார் அவர்களை அழைப்பித்து அத்திவாரக் கல் நாட்டப்பட்டு பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்டத்தில் மானியமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது இப்படி இருக்க 2வது பா. உ; பீ. ஆர். செல்வநாயகம் வலையிறவுப் பாலத்திற்கு அத்திவாரக்கல் நாட்டுவதென பத்திரிகை மூலம் விளம்பரம் செய்துள்ளார்; இந்த இரண்டாவது பா: உ: வின் பச்சோந்தித்தனத்தைப் பற்றி தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ப: கறையான் புற்றெடுக்க பாம்பு சொந்தம் கொண்டாடப்பார்க்கிறது!

ஃ

க; சாந்தராஜா,
சண்டிருப்பாய்.

கே: தமிழரசுக் கட்சி பா: உறுப்பினர்களுள் அதிகமாக பாராளுமன்றத்தில் ஒலிக்கும் குரல் எது?

ப: தர்மலிங்கம், கா: பொ; இரத்தினம் ஆகியோரது குரல்கள்!

கே: தமிழரும் சிங்களவரும் ஒரே இனம் என்று நிதி அமைச்சர் என். எம்; கூறியிருக்கிறாரே ஏன்?

ப: இரு இனங்களையும் ஒரே இனமாக ஆக்கி விட வேண்டுமென்ற ஆசையினால்.

வீ; வேலாயுதம்,
உடப்பு;

கே: செல்லையா குமார சூரியர் ஏன் தமிழை ஆதரிக்க மாட்டேன் என்கிறார்?

ப: அவர் 'தமிழ்' அமைச்சராக இல்லாமல் அம்மாவின் அமைச்சராக இருப்பதால்!

ஃ

இரத்தினசிங்கம்,
நாவற்காடு;

கே: குயுக்தியாரே தமிழ்த் துரோகிகளை தமிழர் என்றழைப்பதில் தவறு உண்டா?

ப: அவர்கள் உண்மைத் தமிழர்களாக இருந்தால், துரோகிகளாக மாறியிருக்க மாட்டார்களே!

கே: 10-5-71 இல் வட்டுக்கோட்டை பா: உ. படுவான் கரையைச் சுற்றி காரில் வந்தாரே ஏனோ?

ப: மட்டக்களப்பு முட்டாளைத் தேடி வந்திருக்கலாம்!

ஃ

கி. தர்மலிங்கம்,
மல்லாகம்.

கே: எமது தொகுதிகளில் தமிழரசுக்கட்சிக் கூட்டங்கள் நடக்க கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர்கள் விசில் அடிக்கிறார்களே இவர்களைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: விசில் அடிச்சான் குஞ்சுகள் என்று சொல்லுங்கள்

உருவகம்

# சிலந்தி வலை

மாலை நேரவெய்யில் பட்டதனால், இரு மரக் கொம்புகளின் இடையே அழகாக பின்னப்பட்டிருந்த அந்த சிலந்தி வலை சிவப்பும் நீலமும் கலந்த ஊதா நிறத்தில் பளபளத்தது; பார்ப்போர் மனதைக் கவர்ந்து தன்பால் ஈர்க்கும் ஓர் மாய சக்தி அந்தச் சிலந்தி வலைக்கு இருந்தது; அந்தச் சிலந்தி வலையின் மையத்திலே உள்ள பீடத்திலே ஓர் அம்மாச் சிலந்தி அழகாகக் குந்தியிருந்து அரசோச்சியது. அம்மாச் சிலந்தியைச் சுற்றி அதன் குஞ்சுச் சிலந்திகள் இருந்தன. அவை சில வேளைகளில் தங்கள் அம்மா பின்னிய மாய வலையில் ஓடியாடி விளையாடின;

அச்சிலந்தி வலை பின்னிய கொம்பில் பல மலர்கள் காணப்பட்டன. அம்மலர்களை நோக்கி தேனீக் கூட்டம் ஒன்று பண்ணிசைத்துப் பறந்து வந்தன. பறந்து வந்த தேனீக்கள் பண்ணிசைத்தபடியே மலர்களில் அமர்ந்து மது வருந்தின. இக் காட்சியைக் கண்ட குஞ்சுச் சிலந்திகள் மத்தியில் இருந்த அம்மாச் சிலந்தியிடம் ஓடிச்சென்று கூறின அம்மா! அம்மா! அதோ பார் அந்த மலர்களிலே அமர்ந்து மதுவருந்தும் தேனீக்கள் இவ்வலையில் உட்கார்ந்து கொண்டால் எங்களுக்கு அவை நல்ல உணவாகும் அல்லவா?

அம்மா சிலந்தி மேலே நிமிர்ந்து பார்த்தது, அழகிய மலர்களிலே உட்கார்ந்து மது உண்ணும் தேனீக்களைக் கண்டது; அம்மாச் சிலந்தியின் நெஞ்சிலே வஞ்சக எண்ணம் உண்டாகியது: தான் பின்னிய வலை வழியே ஓடி மலர்களுக்கு அருகே சென்றது.

ஓ! தேனீக்களே, எத்துணை அழகிய குரலில் இனிமையாக பாடுகிறீர்கள். மதுவை அருந்தி ஆனந்தித்திருக்கும் உங்கள் இனிய பாடலைக் கேட்க என் மக்களும் விரும்புகிறார்கள்; அதோ பாருங்கள் உங்களுக்கென்றே அழகிய பட்டு நூலினால் ஊஞ்சல் கட்டி வைத்திருக்கிறேன்; அந்த ஊஞ்சலில் வந்து உட்கார்ந்து பாடுங்கள்; தென்றல் காற்றில் அந்த ஊதா நிற ஊஞ்சல் ஆடும் அழகினைப் பாருங்கள் என்று அழகாகக் கதைத்தது அந்தச் சிலந்தி;

தேனீக்கள் திரும்பிப் பார்த்தன. அழகாகத் தான் இருந்தது சிலந்தி வலை. என்றாலும் அது நம் இனத்தின் அழிவு வலை என்பதைத் தெரிந்து வைத்திருந்த அனுபவம் முதிர்ந்த ஓர் தேனீ கூறியது.

"அம்மா சிலந்தியாரே அறிவோம் உம் கபட நாடகத்தை அது அழகு வலையில்லை; அது எம் இனத்தை அழிக்க உம்மால் பின்னப்பட்ட அழிவு வலை அது: பட்டு நூல் அல்ல பாச நூல்."

அனுபவமும் அறிவும் அற்ற ஓர் இரு தேனீக்களும் அத்தேனீக் கூட்டத்தில் இருந்தன. அவை முந்தியதேனீக்களைப்பார்த்துக் கூறின, "நீங்கள் படு பிற்போக்குவாதிகளாக இருக்கிறீர்களே, அந்த, அம்மாச் சிலந்தி எங்களை அன்புடன் அழைக்கிறாளே எமக்கென்று பட்டு நூலில் அழகிய ஊஞ்சல் கட்டி வைத்திருக்கிறாளே, தெற்கே இருந்து வரும் தென்றல் காற்றினிலே அவ்வழகிய ஊஞ்சலில் இருந்து ஆடித்தான் பார்ப்போம்! அம்மாவும் அம்மாவின் மக்களும் நம்பாட்டைக் கேட்கட்டும்" என்றன.

அனுபவம் முதிர்ந்த தேனீக்கள் எவ்வளவோ தடுத்தும் கேட்காத அந்த ஓர் இரு தேனீக்களும் அந்த ஊதா நிற வலையின் அழகிலும், அம்மாச் சிலந்தியின் வஞ்சகப் பேச்சிலும் மயங்கி அந்த மாய வலையில் போய் உட்கார்ந்தன! உடனே அம்மாச் சிலந்தியும் அதன் மக்களும் விரைந்து சென்று அவைகளை ஒவ்வொன்றாகப் பிடித்துக் கொன்று உண்டன. அந்த மாய வலை உயிர் குடிக்கும் ஊதாவலை தென்றல் காற்றில் மிக அழகாகத்தான் ஆடிக் கொண்டிருக்கின்றது;

—நீர்வை இந்து

# தாதி அந்தாதி

மருத்துவ மனையில் வாழும்
    தமிழ் மானே! தாதி மங்காய்!
வருத்தத்தால் அழும் நோயாளர்
    வற்ருத கண்ணீர் வற்ற
ஒருத்தி நீ பதவி ஏற்ருய்...
    உன்னை யான் தெய்வ மாகக்
கருத்திலே பதித்த துண்மை!
    கனம் பண்ணியதும் ஓர் உண்மை!

உண்மைதான் தாதிப் பெண்ணே!
    உன்னை நான் மதித்தேன்! நேற்று
புண்ணனோர் சேதி சொன்னான்...
    போயிற்றே மதிப்பு யாவும்!
மண்ணாச்சு மானம் போடி
    மருந்துவ மனையில் உன்னை
தொண்ணூறு மருத்துவர்கள்
    சுவைக் கின்ருராமே...மெய்யா?

மெய்தானா அன்ருேர் மாலை
    மிகநொந்து புண்ணன் நோயால்
'ஐயோ!' என்றழுது கத்தி
    அழுந்த நீ கவனிக்காது
மையலோ டறையில் யாரோ
    மருத்துவன் மடியில் சாய்ந்து
கைகளால் அவன் இரண்டு
    கனிகொய்ய மயங்கினாயாம்!

மயக்கத்தால் நோயின் மாந்தர்
    மடிகின்ருர்...மருத்துவங்கள்
செயத்தக்காள் ஒருத்தி நீயும்
    சீர்கெட்ட 'டாக்டர்'மாரும்
மயக்கத்தால் தழுவல் நன்ருே?
    மருந்தெல்லாம் உனது தாய்மை
வயித்திலே கொட்டவோடி?
    வளர்வதைக் கொல்லவோடி?

'கொல்'லென்று சிரித்துக் கொட்டும்
    கோதையுன் வாயை ஏனோ
வெள்ளைத் துண்டொன்று கட்டி
    விழலுக்கு மூடுகின்ருய்?
உள்ளவைத் தியர்களெல்லாம்
    உண்டவாய்...எச்சில் வாயுள்
பொல்லா நோய்க் கிருமி ஒன்று
    போனால்தான் கேடா? போடி!

போடி! போ! தாதிப் பெண்ணே!
    பொன்னான தமிழ்ப்பெண் மானம்
வாடிப்போய் உதிர வந்தாய்...
    வஞ்சகி கள்ளி போடி!
தேடிப்போ நச்சுக் கோப்பை!
    செத்துப்போ சுடலைக் காடு!
ஈடில்லாத் தமிழ்ப்பெண் மானம்
    இனியேனும் வாழட்டும் போ!

அத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று எங்கள் மொழியைப் பறித்தீர்கள் இன்று மதத்தை அழிக்க முனைகிறீர்கள்!

## மதச்சார்புள்ள சோசலிச நாடு உலகில் எங்காவது உண்டா?

### அ. நி. சபையில் தர்மலிங்கம் பேச்சு!

**வல்வையில் அனைத்துத் தமிழ்க் கப்சிகளாலும் 7.2.71ல் உருவாக்கப்பட்ட எட்டாவது திருத்தத்தை முன்மொழிந்து அரசியல் நிர்ணயசபையில் உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் ஆற்றிய உரை இது.**

காங்கேசந்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுடைய பெயரில் இருக்கும் திருத்தப் பிரேரணையைப் பிரேரிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இதுதான் அந்தப் பிரேரணை:

''இலங்கைக் குடியரசு ஒரு மதச் சார்பற்ற அரசாதல் வேண்டும். ஆனல் அது பௌத்த மதம், இந்து மதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாம் மதம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், பேணி வளர்க்கவும் வேண்டும்.''

மூன்ருவது அடிப்படைத் தீர்மானமும் அதையொட்டி ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணையும் இந்தச் சபையிலே இரண்டு நாட்களாக விவாதிக்கப்பட்டன. விவாத நேரத்திலே பலவிதமான கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டன. அது மட்டுமல்ல. கண்டிச்சாசனம் எழுதப்பட்டது பற்றியும் அந்தச் சாசனத்துக்கு பிரதமரது பூட்டனர் தமிழிலே கையெழுத்து வைத்தது பற்றியும் இங்கே பேசப்பட்டது.

#### தமிழில் ஒப்பமிட்டார் பிரதமரின் பூட்டனர்

அன்றைய விவாதத்தில் இருந்து ஒன்றைக் காணக் கூடியதாக இருந்தது. கண்டி மன்னனுடைய ஆட்சியிலே தமிழ் மொழியைப் பாவிப்பதற்கு எவருமே பின்னிற்கவில்லை; தமிழ் மொழிக்கும் ஒரு தகுந்த இடத்தைக் கண்டி மன்னன் கொடுத்திருந்தான் என்பதைக் காணக் கூடியதாக இருந்தது. பிரதமரது பூட்டன் அந்தச் சாசனத்தில் தமிழிலே கையெழுத்து வைத்தாரென்பதிலிருந்து அந்தக் காலத்திலே இந்த நாட்டில் தமிழுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கப்பட்டிருந்தது என்பதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. அதைவிட்டு வேறும் எத்தனையோ விஷயங்களைப் பற்றியும் இங்கே பேசினர்கள்.

கண்டிச் சாசனத்தை எழுதியவர்கள் இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்தார்களா அல்லது மன்னன்தான் காட்டிக் கொடுத்தானு என்பதைப் பற்றியெல்லாம் பேசினர்கள். கண்டிச் சாசனத்திலே பௌத்த மதத்தைப் பற்றி எழுதியதை நிலைநாட்ட வேண்டும்; அதை அரசியலமைப்பில் சேர்க்க வேண்டும் என்பதுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் திருத்தப் பிரேரணையாக இருந்தது.

அந்த இரண்டு நாட்களும் விவாதத்தில் கலந்து கொண்டவர்கள், இந்த நாட்டிலே வேறு மதத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிருர்கள்; அவர்களும் இந்த நாட்டிலே உரிமையோடு வாழவேண்டும் என்பதைப்பற்றி எந்த விதத்திலும் யோசிக்கவில்லை. மற்ற மதங்களைப் பற்றி எந்த விதமான ஒரு யோசனையையோ, கருத்தையோ சென்ற இரண்டு நாட்களாக நடைபெற்ற அந்த விவாதத்திற் கலந்து கொண்ட எந்த ஒரு அங்கத்தவராவது தெரிவிக்கவில்லை.

#### கொள்கை மாறும் கட்சிகள்

இந்த நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளுடைய சரித்திரத்தை நாம் எடுத்துப் பார்க்கும் பொழுது எல்லா அரசியற் கட்சிகளும் தங்களுடைய கொள்கைகளை அடிக்கடி மாற்றி வந்திருக்கின்றன என்பதைக் காணக்கூடியதாக இருக்கும். மொழியைப் பொறுத்த வரையில் 1952 ஆம், 1953 ஆம் ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டிலேயுள்ள அரசியற் கட்சிகள், ஐக்கிய தேசியக் கட்சி என்றாலும் சரி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி என்றாலும்சரி இடதுசாரிக் கட்சிகள் என்றாலும் சரி, வைத்திருந்த கொள்கையை இன்று வைத்திருக்க வில்லை.

பிரஜா உரிமையைப் பொறுத்த வரையிலும் அதுதான் நிலை. மதத்தைப் பொறுத்தவரையிலும் அந்த நிலை இனிமேல் வந்துவிடும். எல்லா அரசியற் கட்சிகளும் தம் பழைய கொள்கைகளை மறந்து, நீதி நியாயத்தை மறந்து இன்று இயங்கி வருவதை நாம் காணக்கூடியதாய் இருக்கின்றது.

1952, ஆம் 1953 ஆம் ஆண்டுகளுக்கு முன்—ஏன், 1960 ஆம் ஆண்டுக்கு முன் என்றும் குறிப்பிடலாம்—இந் நாட்டிலுள்ள அரசியற் கட்சிகள் அத்தனையும், இந்நாட்



டின் அரசாங்கம் மதப்பற்றற்ற அரசாங்கமாக இருக்க வேண்டும், எல்லா மதங்களுக்கும் சுதந்திரம் அளிக்க வேண்டும், எல்லா மதங்களையும் பாதுகாக்க வேண்டும், எல்லா மதங்களையும் பேண வேண்டும் என்ற கருத்தோடு இயங்கி வந்ததை நாம் அறிவோம்.

ஆனல், இன்று பெரும்பான்மை அரசியற் கட்சிகள் தம் கருத்துக்களை மாற்றி, இந்நாட்டின் அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு மட்டும் தகுந்த இடம் கொடுக்க வேண்டும், மற்றச் சமயங்களைப் பற்றி எந்தவிதமான அக்கறையையும் அரசாங்கம் எடுக்கத் தேவையில்லை என்ற கருத்துப்பட இங்கே நடந்து வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அதனல் தான் இந்த மூன்றும் அடிப்படைப் பிரேரணை விவாதிக்கப்படும் நேரத்தில் அந்த அரசியற் கட்சிகள் நாட்டிலுள்ள சிறுபான்மை மதங்களைப் பற்றியும் அவற்றுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்பது பற்றியும் பேசுவது இல்லாமற் போய்விட்டது.

#### பௌத்த மதம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அந்தக் கட்சியோடு சேர்ந்திருக்கின்ற இடதுசாரிக் கட்சிகளும் மதத்தைப் பொறுத்த வரையிலே கொண்டிருந்த கொள்கைகளை மாற்றியிருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. 1956 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் புத்த ஜயந்திக்காக 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கவேண்டுமென்று அரசாங்கம் கொண்டு வந்த ஓர் உபமானியப் பிரேரணையிலே நடந்த விவாதத்தை நான் இங்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

புத்த சமயம் தோன்றி 2,500 ஆண்டுகள் முடிவடைந்ததற்காக உலகம் முழுவதும் விழா எடுத்த நேரத்திலே, இலங்கையும் அந்த விழாவில் பங்கு கொள்ளவேண்டும் என்பதற்காக 50 இலட்சம் ரூபாவை ஒதுக்க வேண்டுமென்று அன்றைய பிரதமராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவலை ஓர் உபமானியத்தைக் கொண்டுவந்தார். அந்தப் பிரேரணை விவாதிக்கப்பட்டபோது கலாநிதி என். எம். பெரேரா பேசிய பேச்சை நான் இங்கே ஞாபகப்படுத்தவேண்டும்.

அவர் அந்த உபமானியத்தை எதிர்த்துப் பேசிய பொழுது, ''இன்று ஐக்கிய தேசியக் கட்சி தனது கொள்கையை மாற்றிவிட்டது; தனது கொள்கையிலிருந்து நீங்கிவிட்டது; ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே, அதாவது இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த காலத்திலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒரு மதப்பற்றற்ற அரசாங்கமாக இருந்தது; அதுதான் அன்றைய பிரதமர் டீ. எஸ். சேனநாயக்க அவர்களின் கொள்கையாக இருந்தது; ஆனல், இன்று அதை மாற்றிவிட்டார்கள்; அந்தக் கொள்கையை மாற்றி பௌத்தம்தான் இந்நாட்டின் மதமாக இருக்க வேண்டுமென்ற கொள்கைக்குத் திரும்பிவிட்டார்கள்; ஒரு "theocratic state" ஐ உண்டாக்க வேண்டுமென்ற நிலைக்கு வந்துவிட்டார்கள்'' என்று கூறினர். அவர் அன்று பேசிய பேச்சின் ஒரு பகுதியை நான் வாசித்துக் காட்ட விரும்புகின்றேன்.

#### என். எம். அன்று கூறியது!

ஹன்சார்ட் தொகுதி இருபது, பத்தி 4004 இல் இருந்து டாக்டர் என். எம். பெரேரா அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியை நான் இப்பொழுது வாசித்துக் காட்ட விரும்புகிறேன்:

"This Government has over and over again maintained the principle enunciated by the late Prime Minister, the Rt. Hon. D. S. Senanayake, that Ceylon is going to be a secular State, that religion will have nothing to do with Government and that Government will be entirely above religion in the sense of being apart from religion; that it will hold the sales evenly between the different faiths of this country, that it will not set one particular faith against another, that the taxpayers' money will not be used for the purpose of helping one particular religion against another religion. That has been the consistent policy followed by this Government ever since the late Mr. D. S. Senanayake was Prime Minister."

ஐக்கிய தேசியக் கட்சி அதன் கொள்கையை மாற்றிவிட்டது. இன்றைக்கு கண்டி சாசனத்தில் உள்ள அதே சரத்துக்களை புதிய அரசியல் அமைப்பில் சேர்க்க வேண்டும் என்று சொல்லிக் கேட்கிருர்கள்; போராடுகிருர்கள். அவர்கள் தங்களுடைய கொள்கையை மாற்றியது மாத்திரம் அல்ல. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் தங்கள் கொள்கைகளை மாற்றினர்கள்.

#### பண்டா விரும்பாத மதப்பற்று

அக்கட்சியின் முதலாவது பிரதமர் காலஞ்சென்ற கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க இந்த நாட்டிற்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்று ஒரு பாராளுமன்றக் குழுவை நியமித்த நேரத்திலே அவர் ஒரு ''மாதிரி'' அரசியல் அமைப்பைச் சமர்ப்பித்து இருந்தார். அந்த அரசியல் அமைப்பிற்கூட இந்த நாட்டு அரசாங்கம் ஒரு மதப்பற்றற்ற அரசாங்கமாக இருக்க வேண்டும் என்று அவர் அதில் வற்புறுத்தி இருந்தார். ஆகையால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று தனது கொள்கையை மாற்றி விட்டது. அதுமாத்திரமல்ல லங்கா சமசமாஜக் கட்சியினரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினரும் கூட இன்றைக்குத் தங்களது மதக் கொள்கையை மாற்றியதைப் பார்க்கும் பொழுது சிரிப்பதா அல்லது அழுவதா என்று தெரியவில்லை.

மதம்பற்றி இடதுசாரிகளும் பேசுகிருர்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கின்றது அதாவது when a pirate prays there is great danger என்று. இன்றைக்கு இடதுசாரிகள் மதத்தைப் பற்றிப் பேசும்பொழுது நாட்டிற்கு ஆபத்துத்தான் இருக்கின்றது என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு இடதுசாரிகள் தங்கள் மதக் கொள்கையை மாற்றி இந்த நாட்டின் மதம் பௌத்த மதமாக இருக்க வேண்டும் என்று சொல்லி அதன் பொருட்டு இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் அரசியல் அமைப்பின் ஒரு சரத்தையும் கொண்டு வந்திருக்கிருர்கள். எல்லா அரசியற் கட்சிகளும் தங்கள் கொள்கைகளை இன்று இப்படி உங்கள் கொள்கையை மாற்றுகின்ற நீங்கள் 1955 ஆம் ஆண்டில் என்ன பேசினீர்கள். 1960 ஆம் ஆண்டில் என்ன பேசினீர்கள்? இன்றைக்கு என்ன பேசுகிறீர்கள் என்று கேட்டால் எந்த விதமான கூச்சமும் இல்லாமல் கேட்பார்கள் 'எங்கள் கொள்கைகளை நாங்கள் மாற்றிவிட்டோம்; அப்படி மாற்றுவதில் என்ன தவறு இருக்கின்றது?' என்று.

#### கொள்கை இல்லாதவர்கள்

சட்டையை மாற்றுவது போல அரசியற் கட்சிகள் எல்லாம் தம் கொள்கைகளை மாற்றி வந்திருக்கின்றன. ஆனல் நாங்கள் ஒன்றைக் கவனிக்கக்கூடியதாக இருக்கின்றது. இவர்கள் எல்லோரும் சிறுபான்மை மக்களைப் பொறுத்த அளவில்தான் தங்கள் கொள்கைகளை

(7-ம் பக்கம் பார்க்க)

---

## 'ஒற்றுமையும்........

'வல்வெட்டித்துறையில் 9—2—71ல் கூடிய கட்சிகள் இலங்கைத் தமிழரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிக்கழகம் ஆகியன. அரசியல் வரைவு அடிப்படைத் தீர்மானங்களுக்கு சில திருத்தங்களை கொண்டுவர அக்கட்சிகள் ஒருமனதாக முடிவு செய்தன. பொதுத்தேர்தல் என்பதற்கு ஏதாவது அர்த்தம் இருக்குமானல்—கடந்த தேர்தலில் கிடைத்த முடிவுகளின்படி—வல்வையில் கூடிய நான்கு கட்சிகளும் இந்நாட்டில் வாழும் 99 வீதம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று எவ்வித மறுப்புக்குமிடமின்றி கூற முடியும். ஆகவே இந்த மாநாட்டில் ஒற்றுமையாக உருவாக்கப்பட்ட திருத்தங்கள் ஒன்பதும் தனியொரு கட்சியின் கோரிக்கையல்ல-இந்நாட்டில் சிங்கள மக்களுடன் சமத்துவத்தின் அடிப்படையில் ஒற்றுமையாக வாழ விரும்பும் ஒன்றுபட்ட தமிழினத்தின் கோரிக்கையாகும்'

—அரசியல் நிர்ணய சபையில் உடுவில் பா. உ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை மக்களின் உரிமைகளை பறிப்பதில் சிங்களக் கட்சிகள் அனைத்தும் இணைகின்றன!

## இடதுசாரிகளின் திடீர் மதப்பற்றால் மதத்துக்கே ஆபத்து ஏற்படும்!

## தமிழினத்தின் ஒன்றுபட்ட குரலே வல்லை கோரிக்கைகள்!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றி வந்திருக்கிறார்களே தவிர மற்றக் கொள்கைகளை மாற்றவில்லை;

மொழியைப் பொறுத்த அளவில் 1955, 1956 ஆம் ஆண்டுகளில் இருந்த நிலைக்கும் இன்றைக்கு இருக்கும் நிலைக்கும் இடையே வித்தியாசம் இருக்கின்றது. இப்படியாக பிரஜாவுரிமையைப் பொறுத்த அளவிலும் மதத்தைப் பொறுத்த அளவிலும் தங்கள் கொள்கைகளை மாற்றினார்கள்.

சிறுபான்மைத் தமிழ் மக்களது உரிமைகளைப் பறிப்பதற்கு, சிறுபான்மை மக்களை இந்த நாட்டிலே உரிமையற்றவர்களாக வாழச் செய்வதற்கு இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மைக் கட்சிகள் எல்லாம் தங்கள் கொள்கைகளை அடிக்கடி மாற்றி வந்திருக்கின்றன. அதைப் பற்றி அவர்களுக்கு எந்தவிதமான வெட்கமோ துக்கமோ இல்லை.

நாம் ஏதாவது விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து விட்டால் இடதுசாரிக் கட்சிகள் எங்களைக் கேலிசெய்வார்கள், ஏளனஞ் செய்வார்கள்.

ஆனால் சிறுபான்மை மக்களை அழிப்பதற்காக, சிறுபான்மைத் தமிழர்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்காக இடதுசாரிகள் கட்சிகள் என்றாலும் சரி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்றாலும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியோடு சேரத் தயங்கமாட்டார்கள். இதே காரணத்துக்காக ஐக்கிய தேசியக் கட்சியும் அவர்களுடன் சேரத் தயங்கமாட்டாது.

### சிறுபான்மையினரின் மதத்தையும் அழிக்க முயற்சி

மூன்றாவது அடிப்படைத் தீர்மானத்தில் இருக்கிறபடியே அரசியலமைப்பிற் சேர்க்கப்பட்டால் இந்த நாட்டில் ஒரேயொரு மதத்துக்குத்தான் இடம் இருக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது. உங்களுடைய மதம் பௌத்த மதமாகத்தான் இருக்கும் என்பதை எவரும் மறுக்க முடியாது. இங்கே மற்றைய மதங்களுக்கும் இடம் இருக்கிறதே என்று சிலர் கருதக் கூடும்.

5 ஆவது அடிப்படைத் தீர்மானத் தீர்மானத்தின் 10 ஆவது பகுதியிலே மற்ற மதங்களைப் பற்றியும் கூறி இருக்கிறார்களே ஆகையால் எதற்காக ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும் என்று சிலர் கருதக் கூடும். அது தனிப்பட்ட மனிதர்களுக்கு வழங்கப்பட்ட உரிமையே தவிர மதத்துக்கு வழங்கப்பட்ட உரிமையல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பௌத்தத்தைப்பொறுத்த வரையில் மூன்றாவது அடிப்படைத் தீர்மானத்திலே உரிமை வழங்கப்பட்டிருக்கிறது அதற்குத் தகுந்த இடம் இந்த நாட்டில் இருக்கவேண்டும் என அந்தப் பிரேரணை கூறுகிறது. மற்ற மதங்களுக்கு ஐந்தாவது அடிப்படைத் தீர்மானத்தின் பத்தாவது பகுதியிலேதான் இடம் இருக்கிறது. அது இந்து மதத்தை வழிபடுகிறவர்களுக்கு உள்ள உரிமை கிறிஸ்தவ மதத்தை வழிபடுகிறவர்களுக்கு உள்ள உரிமை, இஸ்லாமிய மதத்தை வழிபடுகிறவர்களுக்கு உள்ள உரிமை என்பதைத் தவிர, கிறிஸ்தவர்களுக்கோ அல்லது இந்துக்களுக்கோ அல்லது இஸ்லாமியர்களுக்கோ வேறு உரிமை இல்லை என்பதை மறந்துபோகக்கூடாது.

ஆகையால், எமது வருங்கால அரசியலமைப்பிலே பௌத்தத்துக்கு மட்டும் தான் இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர மற்ற மதங்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லையென்பதை நாங்கள் மறந்துவிடக்கூடாது. அதனால்தான் இந்த அரசாங்கம், இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுடைய மொழியை ஒழித்ததைப் போல, மதத்தையும் ஒழித்துக்கட்டும் அடிப்படையில் இந்த அரசியலமைப்பை அமைக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சுமத்த விரும்புகின்றேன்.

இந்த மூன்றும் அடிப்படைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு புதிய அரசியலமைப்பிலே அது ஒரு சரத்தாக ஆக்கப்பட்டால் மற்ற மதங்களுக்கு இன்று அரசாங்கம் செய்யும் நிதி உதவியைப் போன்ற உதவிகளைச் செய்ய முடியுமா என்ற ஐயம் எழுகின்றது.

கே: பி. ரத்நாயக்க:- யார் சொன்னார்கள்?

திரு: தர்மலிங்கம்:- இன்று அரசாங்கம் இஸ்லாமிய மதத்தை, அதன் கலை, கலாசாரத்தை வளர்க்க நன்கொடைகள் கொடுக்கின்றது. அதுபோன்று சைவ சமயத்தையும் மற்றும் மதங்களையும் வளர்க்க நன்கொடைகள் கொடுக்கின்றது. ஆனால், புதிய அரசியலமைப்பிலே இந்த மூன்றும் அடிப்படைத் தீர்மானம் ஓர் அம்சமாக அமையுமானால் பௌத்தத்துக்கு மட்டுந்தான் அரசாங்கம் உதவி செய்ய முடியுமே தவிர, மற்ற மதங்களுக்கு அவ்வித உதவிகளைச் செய்யமுடியாத நிலை ஏற்படும். ஆகையால் இன்றிருக்கும் நிலைமையிலும் மோசமான ஒரு நிலைதான் புதிய அரசியலமைப்பின் மூலம் உருவாக்கப்பட இருக்கின்றது.

### பௌத்தத்துக்கு மட்டும் பாதுகாப்பு ஏன்?

எதற்காக பௌத்தத்தைப் பாதுகாக்க வேண்டும்? பௌத்தத்துக்குத் தகுந்த இடம் கொடுக்கவேண்டுமென்று இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்? அரசியமைப்பில் இது எதற்காக இடம் பெறுகின்றது? உலக நாடுகளின் எந்த ஓர் அரசியலமைப்பிலும் பெரும்பான்மை இனத்தின் மதத்தைப் பாதுகாக்க சரத்துக்கள் இடம் பெறவில்லை.

பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேண்டும், அதுவும் அரசியலமைப்பிலே அது இடம் பெறவேண்டும் என்று கேட்கிறீர்கள். யார் பௌத்த மதத்தை அழித்துவிடுவார்கள் என்று பயப்படுகின்றீர்கள்? இந்நாட்டின் சனத்தொகையிலே 69 வீதமானோர் பௌத்த மக்கள். அவர்கள் பௌத்தத்தை அழித்துவிடுவார்கள் என்று பயப்படுகின்றீர்களா? அல்லது உங்கள் அரசாங்கத்தில் இருக்கின்ற பௌத்த மதத்தைச் சேராத அமைச்சர் யாராவது பௌத்தத்திற்கு எதிராக நடப்பார்கள் அல்லது பௌத்தத்தை அழித்துவிடுவார்கள் என்று நினைக்கிறீர்களா? அல்லது உங்களுடைய அமைச்சரவையில் உள்ள மார்க்சியவாதிகள் பௌத்தத்தை அழித்துவிடுவார்கள் என்று நினைக்கிறீர்களா? எதற்காக இந்தப் பாதுகாப்பைத் தேடுகிறீர்கள்? பெரும்பான்மை மக்களின் மதத்திற்கு எதற்காக இந்தப் பாதுகாப்பு?

சாதாரணமாக ஒருநாட்டிலுள்ள சிறுபான்மை மக்களின் மொழி, மதத்திற்குத்தான் பாதுகாப்பு இருக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு ஒரு நாட்டிலுள்ள பெரும்பான்மை இனத்தின் மொழிக்கும் மதத்திற்கும் எதற்காகப் பாதுகாப்பு தேடவேண்டும் என்று உங்களைத் தயவாகக் கேட்க விரும்புகிறேன்.

கே: பி. ரத்நாயக்க:- யூ. என். பி. எழும்பிப் போனது அதற்காகத்தானா?

### மதப்பற்று நாடாக மாறிவிடும்!

திரு. தருமலிங்கம்:- இந்த நிலைமை [illegible] ஒன்றுதான்- எனவே இந்த மூன்றாவது அடிப்படைத் தீர்மானத்தை வருங்கால அரசியலமைப்பிலே சேர்ப்பது என்றால் இந்த நாட்டு அரசாங்கம் ஒரு மதப்பற்றுள்ள அரசாங்கமாகவும் இந்த நாடு ஒரு மதப்பற்றுள்ள நாடாகவும்தான் விளங்கும்.

50 இலட்சம் ரூபாவைப் புத்த ஜயந்தி விழாவுக்காக ஒதுக்கிய நேரத்திலே இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு அதை எதிர்த்து பேசும் போது என்ன கூறினார்கள்? You are leading completely to a theocratic state. இந்த நாடு ஒரு மதப் பற்றுள்ள நாடாக மாறிவிடும் என்று அவர் அச்சப்பட்டார் அன்று. இன்றைக்கு அரசியல் அமைப்பிலே பௌத்த மதத்திற்குத்தான் இடம் கொடுக்க வேண்டும் என்று கருதினால் எங்கள் நாடு "theocratic state" ஆக மாறி விடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஆகவே இந்த மூன்றாவது அடிப்படைத் தீர்மானம் இந்த நாட்டை ஒரு ஜனநாயக நாடாக இருக்கச் செய்யாது. இந்த நாட்டை "ஒரு மதப்பற்றுள்ள நாடாக"த்தான் மாற்றிவிடும் என்பதை நான் கூற விரும்புகிறேன்; அதற்காகத்தான் நாங்கள் இந்தப் பிரேரணையை எதிர்க்கிறோம்;

எமது திருத்தப் பிரேரணை காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களது பெயரில் இருந்தாலும் எமது திருத்தப் பிரேரணை இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களில் 99 சதவிகிதத்தினர் ஆதரித்த ஒரு பிரேரணை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன்.

### வல்லை மகாநாடு

எனக்கு முன்பு பேசிய நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. சி. அருளம்பலம் அவர்கள் வல்வெட்டித்துறையில் நடந்த மாகாநாட்டைப் பற்றிக் கூறினார். எமது திருத்தப் பிரேரணை அந்த மகாநாடு தீர்மானித்த தீர்மானங்களில் ஒன்று என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

வல்வெட்டித்துறையிலே 1971 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 7 ஆம் தேதி இலங்கையில் தமிழர்களுடைய தலைமையில் இருக்கின்ற நான்கு அரசியற் கட்சிகளும் சேர்ந்து ஒரு மகாநாடு நடத்தியது. அந்த மகாநாடு ஒன்பது தீர்மானங்களை நிறைவேற்றியது. வல்லை மகாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானங்களிலே எட்டாவது தீர்மானமும் இன்று நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கும் தீர்மானமும் ஒன்றுதான் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

"இலங்கைக் குடியரசு சமயச் சார்பற்றதாக இருத்தல் வேண்டும்; ஆனால் பௌத்த இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைப் பாதுகாத்தும்பேண வேண்டும்;"

இதுதான் வல்லையிலே நாம் எடுத்த தீர்மானங்களிலே எட்டாவது தீர்மானம்; அதே தீர்மானத்தைத் தான் நாங்கள் இன்று காங்கேசன் துறைப் பிரதிநிதி அவர்களுடைய தீர்மானமாக இங்கே விவாதிக்கிறோம்;

வல்வெட்டித்துறையிலே எடுக்கப்பட்ட ஒன்பது தீர்மானங்களும் எங்களுடைய திருத்தப் பிரேரணைகளிலே இடம்பெற்றிருக்கின்றன என்பதை மறந்து நல்லூர் பிரதிநிதி பேசுவதைப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்பாகத்தான் இருக்கிறது: அந்த ஒன்பது தீர்மானங்களும் ஒழுங்குப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. அந்த ஒன்பது தீர்மானங்களையும் நாங்கள் விவாதிக்கத்தான் போகிறோம்: அந்த நேரத்திலே நல்லூர் பிரதிநிதி எந்த விதத்தில் நடந்துகொள்ளப் போகிறார் என்பதையும் பார்க்கத்தான் போகிறோம்.

### அருளம்பலத்தின் மறுப்பு

நல்லூர்ப் பிரதிநிதி வல்வெட்டித்துறை மாகாநாடு பற்றி முன்னர் பேசினார்; ஆனால் அவருடைய கட்சியின் உப செயலாளர் நண்பர் பரமானந்தராஜா மகாநாட்டுக்கு வந்த பொழுது கூறினார், நல்லூர் பிரதிநிதி அவர்கள் இந்த மாநாட்டுக்கு வருவதற்கு ஆவலோடு இருந்தார். ஆனால் திடீரென்று சுகவீனம் ஏற்பட்டுவிட்டபடியாலே வர முடியவில்லை என்று;

அருளம்பலம்:- நீர் அக்கூட்டத்தின் அறிக்கையை ஒப்புவிக்கிறீரா? நான் உமது அறிக்கையை மறுக்கிறேன்!

தர்மலிங்கம்:- கட்சியின் செயலாளர் நிச்சயமாக உண்மையையே பேசுவார்; (தமிழ் காங்கிரசின்) உதவிச் செயலாளர் கூறியிருப்பதை நீர் மறுக்கிறீரா?

அருளம்பலம்:- நான் அதை மறுக்கிறேன்— நீர் அதை நிரூபிப்பீரா?

தர்மலிங்கம்:- என்னைவிட உமக்குத்தான் அவரைப் பற்றி நன்கு தெரியும்.

அருளம்பலம்:- நீர் அக்கூட்டத்திற்கு போயிருந்தவர். எனவே உண்மையை பேச வேண்டும்!

தர்மலிங்கம்: ஆகையால் இந்தப் பிரேரணை தமிழரசுக் கட்சியினுடைய பிரேரணை மாத்திரமல்ல— நான்கு தமிழ் அரசியற் கட்சிகளுடைய பிரேரணையுமாகும் என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்த மகாநாட்டிலே பிரசன்னமாயிருந்தவர்களுடைய பெயர்களை நான் வாசித்துக்காட்ட விரும்புகிறேன். தமிழ் காங்கிரஸ் சார்பில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த திரு. கி. நடராசா, திரு. கி.

(11-ம் பக்கம் பார்க்க)

## ......வேற்றுமையும்'

'தமிழரசுக்கட்சிதான் தமிழ் மக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரேயொரு கட்சியென்றும் தமிழ் மக்களின் தலைமை தங்கள் கையிலேயே இருப்பதாகவும் உடுவில் எம். பி. கருதுகிறார். ஆனால் அவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதை விரைவில் உணர்வார்கள்.

'எனது கட்சியையும், தமிழ் பொது மக்களையும் பொறுத்தவரை நான்கு கட்சி மாநாடு என்ற போர்வையில் வல்வெட்டித்துறையில் ஒரு கண்துடைப்பு நடத்தப்பட்டது என்று துணிச்சலுடன் கூறுவேன். ஒரு கட்சியென்ற ரீதியில் நாங்கள் அம் மாநாட்டுக்கு அழைக்கப்படவுமில்லை—அதில் நாங்கள் கலந்துகொள்ளவுமில்லை. உடுப்பிட்டி முன்னாள் பா. உ. சிவசிதம்பரம் அப்பகுதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் அதில் கலந்து கொண்டார். அவர்கள் சந்தித்த பின்பு திரு. சிவசிதம்பரம் எங்களை அணுகி சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டு விட்டு, ஒன்பது அம்ச திருத்தங்களை மட்டுமே கொண்டுவருவதாக தமிழரசுக்கட்சியினர் ஒப்புக் கொண்டுள்ளதாக கூறினார்; இதை நான் பொறுப்புடன் கூறுகிறேன்.

அ.நி. சபையில் நல்லூர் பா.உ. திரு. சி. அருளம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் சிலேடைப் பாடல்கள்

நேற்றைப் போலவே இன்றைக்கு, இன்றைப் போலவே நாளைக்கு, நாளையைப் போலவே நாளை மறுநாள் என்ற போக்கில், மாறுதலே இல்லாமல் வாழ்வதை எந்த மனிதரும் விரும்புவதில்லை. காண்பது, கேட்பது, சிந்திப்பது, செய்வது என்றும் எதிலுமே, ஒரு நாள் போலவே மறுநாளும் இருந்தால், வாழ்க்கையிலே அலுப்பு ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால், எதிலுமே வகைமைப்பாடு இருந்து கொண்டே இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்கள். விதவிதங்களான வகைமைப்பாடுகளில் மக்கள் கொள்ளுகின்ற நாட்டமே, ஒரு வகையில், வளர்ச்சிக்கும் புதுமைக்கும் அடிப்படைக் காரணமாக அமைகிறது.

தமிழ்க் கவிதை சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியாக வளர்ந்து வந்திருக்கிறது. இந்த வளர்ச்சி வரலாற்றில், கவிதையின் உருவ அமைப்பிலும், அதில் எடுத்துச் சொல்லப்படும் கருத்துக்களிலும், அக்கருத்துக்களை எடுத்துச் சொல்லும் முறைகளிலும் எத்தனையோ வகைகள் மாறி மாறி வந்திருக்கின்றன; சங்க இலக்கியம் அகவல் பாட்டாக உள்ளது; சமய இலக்கியம் பெரும்பாலும் இசைப்பாட்டாக உள்ளது; காவிய இலக்கியம் பெரும்பாலும் விருத்தப் பாட்டாக உள்ளது; பிற்காலச் சித்தர் பாடல்களும் மற்றவையும், சிந்துகளாகவும் கண்ணிகளாகவும் உள்ளன. கவிதையில் எடுத்தாளப்படும் கருத்தும், முன்பு காதலும் வீரமுமாக இருந்தது; இடைக்காலத்தில் நீதியாக மாறி, பக்தியாகப் படர்ந்து, தத்துவங்களாகத் தழைத்து புராண மூட நம்பிக்கையாகச் சாய்ந்தது; இன்று மெதுமெதுவே பொதுமை நல எண்ணமாக உயர்ந்து வருகிறது. இவ்விதமாக மாறி மாறி வந்த கருத்துக்களைக் கவர்ச்சிகரமாக எடுத்துரைத்து மக்களை மகிழ்விப்பதற்காகப் புலவர்கள் காலத்தோடு ஒட்டிய வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பல்வேறு உத்திகளின் வரிசையில் தோன்றிய ஒன்றுதான் சிலேடை.

### மாட்டுக்கோன் தங்கை

ஒரே ஒரு சொற்றொடர் இரண்டு விதமாகவோ இரண்டுக்கும் மேற்பட்ட பல விதங்களிலோ பொருள் படும்படி அமைந்திருப்பதையே சிலேடை என்று சொல்வார்கள். தனித்தனித் தொடர்களில் மட்டுமல்லாமல் முழுப் பாடல்களிலும், சிலேடைப் பொருள் அமைந்திருப்பதுண்டு. இத்தகைய பாடல்கள் தமிழில் நூற்றுக்கணக்கில் உள்ளன.

''மாட்டுக்கோன் தங்கை,
மதுரைவிட்டுத்
தில்லைநகர்
ஆட்டுக்கோனுக்குப்
பெண்டாயினள்
—கேட்டிலையோ?
குட்டி மறிக்க ஒரு
கோட்டானையும் பெற்றாள்
கட்டிமணிச்
சிற்றிடைச்சி காண்''

என்பது அப்படி இரண்டு பொருள்தருகிற ஒரு பாட்டு. ''மதுரையைச் சேர்ந்த ஒரு மாட்டிடையனின் தங்கையாகிய அழகிய பெண் ஒருத்தி தில்லையிலே உள்ள ஆட்டிடையன் ஒருவனை மணந்துகொண்டாள்; ஆடு மேய்க்க ஓர் அப்பாவிப் பிள்ளையையும் அவள் பெற்றாள்'' என்பது இந்தப் பாட்டின் பொருள்.

நமது புராணக் கதைகளை மனத்திற் கொண்டு பாட்டைப் படிக்கும்போது, இதே பாடலுக்கு முழுக்க முழுக்க வேறுபட்ட ஒரு பொருள் கிடைக்கிறது; திருமாலின் அவதாரமாகிய கண்ணன் இடைக் குலத்திலே பிறந்தான் என்பது ஒரு கதை.

சிவனுடைய மனைவி திருமாலின் தங்கை என்பது மற்றொரு கதை. இந்த இரண்டு கதைகளையும் இணைத்து, அவைகளின் பின்னணியோடு பாடலைப் பார்த்தால் மதுரையிலுள்ள திருமாலின் தங்கையராகிய மீனாட்சி தில்லைச் சிதம்பரத்தில் நடனம் ஆடும் தலைவனாகிய சிவனை மணந்துகொண்டாள் என்று பொருள் வருகிறது.

அந்த இடைச்சியைப் பார்வதியாகக் கொண்டு பார்க்கும்போது, ''குட்டி மறிக்க ஒரு கோட்டனையும் பெற்றாள்'' என்னும் தொடரும், பக்தர்கள் தலையில் மாறி மாறிக் குட்டிக்கொண்டு வழிபடுகின்ற ஒற்றைக் கொம்பு யானையாகிய கணபதியையும் அவள் பெற்றாள் என்று பொருள்படுகிறது.

### படர்ந்து பரவியது

நமது கடவுளைச் சுற்றி எழுந்த புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிலேடைப் பாடல்களே தமிழில் அதிகமாக உள்ளன.



சாலினி இளந்திரையன்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலே கூடச் சிலேடை பாடுவது பெரும் புலமையாகக் கருதப்பட்டதென்றே தெரிகிறது. கால்நடை வைத்திய அதிகாரியாக இருந்த வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் 'நெல்லைச் சிலேடை வெண்பா' என்னும் நூலைப் பாடியிருப்பதிலிருந்து இதை ஊகிக்க முடிகிறது. சீரங்கச் சிலேடை வெண்பா, குறுக்குத்துறைச் சிலேடை வெண்பா போன்றவைகளும் இந்தக் காலத்தை ஒட்டி எழுந்தவைகளே.

சிலேடைப்பாட்டு, பெரும்பாலும் சமயச்சார்புடைய செய்திகளையே சொல்லி வந்தாலும், நமக்குச் சிறிது முற்பட்ட காலத்தில் இங்கு வந்து சேர்ந்த துப்பாக்கி, கைக்கடிகாரம், பத்திரிகை முதலான புதிய பொருள்களை வைத்துப் பாடும் சில சிலேடைப் பாடல்களும் ஆங்காங்கே உள்ளன.

''சக்கரத்தினால், அரவம்
தாங்கதலினோடு
முள்ளெட்டு
அக்கரத்தினால்,
வேலை ஆர்வகினால்
மிக்க அன்பர்
முக்கியமாய்க் கைக்
கொளலால்.
முத்துச்சாமி துரையே
கைக்கடியாரம் திருமால்
காண்''

என்பது திருமாலுக்கும் கைக்கடியாரத்துக்கும் சிலேடையாக அமைந்த ஒரு பாட்டு. இதிலே வரும் திருமால் வருணனை புராணக் கதைகளை அடிப்படையாகக் [illegible] கையிலே சக்கரம் வைத்திருக்கிறார், பாம்பினால் தாங்கப்படுகிறார், அட்டாச்சரம் என்னும் எட்டு எழுத்து மந்திரத்தால் குறித்து வணங்கப்படுகிறார், கடலிலே பள்ளி கொள்ளுகிறார் என்பன எல்லாம் அந்த புராணங்கள் தரும் செய்திகளே. ஆயினும், கைக்கடியாரத்தைப் பற்றிய சில சுவையான செய்திகளையும் இப்பாடல் தருகிறது: கடிகாரத்தினுள்ளே சக்கரம் இருக்கிறது; அது இடையறாது ஒலி எழுப்பிக்கொண்டே ஓடுகிறது; கடியாரத்தின் முட்கள் சென்று தொடக்கூடிய விதமாக, அதன் முகப்பில், சுற்றிலும் எண்கள் எழுதப்பட்டுள்ளன; கடியாரம் சிறந்த வேலைப்பாடு அமைந்ததாக உள்ளது. எனவே, பலரும் விரும்பி அதைத் தங்களின் கையில் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

கடியாரத்தைப் பற்றிய இத்தனை செய்திகளைத் தருகிற ஒரு பாடல், திருமாலின் வருணனையாகப் படிப்பதற்கும் பொருத்தமாக உள்ளது என்பது வியப்புக்கு உரியதே.

இதைப் பாடிய அழகிய சொக்கநாத பிள்ளை என்னும் புலவரே கிழிந்துபோன குடைக்கும் மரத்துக்கும் சிலேடையாக ஒரு பாட்டுப் பாடியுள்ளார்:

''பிஞ்சு கிடக்கும்;
பெருமழைக்குத்
தாங்காது;
மிஞ்ச அதனுள்
வெயில் ஒழுகும்
தஞ்சமென்றோர்
வேட்டது அருள்முத்து
சாமித்துரை
ராஜேந்திராகேள்.
கோட்டுமரம் பீற்றல்
குடை''

என்பது அந்தப் பாட்டு. பீற்றல் குடை பிஞ்சு கிடக்கிறது, —அதாவது பிய்ந்து கிடக்கிறது; பெரிய மழைக்கு இந்தக் குடை தாங்காது; அதை விரித்துப் பிடித்தால் வெயிலும் அதனுள்ளே ஒழுகுகிறது. மரத்திலே காய்ப்பிஞ்சுகள் கிடக்கும்; அதுவும் பெருமழைக்குத் தாங்காது; வெயில் அதன் இலைகளுக்கிடையே பாய்ந்து புள்ளி புள்ளியாகக் கிடக்கும். எனவே, ''பிஞ்சு கிடக்கும், பெருமழைக்குத் தாங்காது, மிஞ்ச அதனுள் வெயில் ஒழுகும்'' என்னும் வருணிப்பு மரத்துக்கும் பொருந்துகிறது; கிழிந்த குடைக்கும் பொருந்துகிறது.

இதுபோலவே கள்ளுக்கும் கடவுளுக்கும் சிலேடை, ஆனைமுகனுக்கும் பானைக்கும் சிலேடை, முகுந்தனுக்கும் முறத்துக்கும் சிலேடை, கூத்தியாருக்கும் குரங்குக்கும் சிலேடை, பூசணிக்காய்க்கும் பரமசிவனுக்கும் சிலேடை, கள்ளனுக்கும் செருப்புக்கும் சிலேடை, வேசைக்கும் சவுளிக்கடைக்கும் சிலேடை பல்வேறு இணைகளின் மீது, புலவர்கள் சிலேடைப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

வெறும் வருணனைகளாக உள்ள சிலேடைப்பாடல்களோடேயே ஆழ்ந்த தத்துவங்களை விளக்கும் சில பாடல்களும் உள்ளன. ஒரு முருகபக்தர், திருவேரகம் என்னும் ஊரில் உள்ள கடவுளை நோக்கி, ''வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?—இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை?' என்று கேட்கிறார். ''இந்த பக்தர் கடவுளிடம்போய் மளிகைக்கடை மொழியில் பேசுகிறாரே'' என்று திகைக்கும் நமது வியப்பு அதிகரிக்கும்படி, 'மங்காத, சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம், ஏரகத்துச் செட்டியாரே'' என்று அதே முறையில் பேசி முடிக்கிறார் பக்தர். அவர் சொன்ன செய்திகளை வரிசைப்படுத்தினால்,

வெங்காயம் சுக்கானால்
வெந்தயத்தால்
ஆவதென்ன?
இங்கார் சுமந்திருப்பார்
இச்சரக்கை
மங்காத
சீரகத்தைத் தந்தீரேல்
தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டி
யாரே''

என்னும் பாட்டு உருவாகிறது. வெங்காயம், சுக்கு, வெந்தயம், சீரகம், பெருங்காயம் என்று நடக்கும் இப்பாட்டினுள்ளே, சிலேடையாக வேறொரு தத்துவப் பொருள் அடங்கி இருக்கிறது: திருவேரகம் என்னும் தலத்தில் செட்டி என்னும் பெயரோடு அமர்ந்திருக்கும் இறைவனே, கொடிய இந்தக் காயமானது விரதங்களால் சுக்கைப்போல வற்றக் காய்ந்துவிட்டால், உலோக பஸ்பங்கள் தயாரித்து நான் அதைப் பாதுகாக்க வேண்டியதில்லை; இந்த என் உடம்பை வீணிலே சுமந்து திரியவும் மாட்டேன். சீரிய இன்ப அகமாகிய மோட்ச வீட்டை எனக்கு நீர் தந்துவிட்டால், மறுபடி மனித உடம்பில் பிறவி எடுப்பதையே நான் விரும்பமாட்டேன்.'' இதுதான் இந்தப் பாடலின் மற்றொரு பொருள்...

### லிமெரிக் நெறியில்...

மேல்நாட்டு மொழிகளில் ''லிமெரிக்'' என்னும் பெயருடைய ஒரு செய்யுள் வகை வளர்ந்துள்ளது. நகைச்சுவையே அதன் முக்கியமான நோக்கம்; சிலபோது லிமெரிக் பாடல்களில் சிறந்த கருத்துக்களும் இடம் பெறுவதுண்டு. ஆயினும், பெரும்பாலும் சாதாரணப் பொருள்களின் மீதும் ஆபாசமாகவும் அமைந்த நகைச்சுவை லிமெரிக்குகளே அதிகம். சிலேடைப் பாடல், விடுகதைபோன்ற ஒரு விளையாட்டுப் பாட்டாகையால், அதிலும், இன்ன பொருளைத்தான் எடுத்தாள்வது இன்ன விதமாகத்தான் பாடுவது என்ற வரையறைகள் இல்லை. ஒருசிலர் கூடிய இடத்தில் சொல்லி மகிழுவதற்காகவே அமைந்த சிலேடைப்பாடல்களில், சொல்லவும் கேட்கவும் கூசும்படியான ஆபாசமும் சற்று அதிகமாகவே இருக்கிறது.

அந்தக் காலத்திய இலக்கிய உத்திகளில் ஒன்றாகத் தோன்றிவளர்ந்த சிலேடையிலும் அந்தமாசு படிந்திருப்பதில் வியப்பில்லை. அதனாலேதான், சிலேடைப் பாடல், இலக்கியத்தினாலே கிடைக்கக் கூடிய பெரிய பயன்களை விளைவிக்காததோடு, ஒரு நகைச்சுவைப் பொழுதுபோக்கு விளையாட்டாகவும் அமைந்துவிட்டது.

—(இந்திய வானொலியின் தில்லி நிலையத்தில் நிகழ்த்திய உரை.)

## தமிழின் முதல் கலைக் களஞ்சியம் எது?

'அபிதான சிந்தாமணி' என்னும் நூலைப்பற்றி டெல்லி தமிழ்ச் சங்கத்தினர் வெளியிட்ட சுடர் 'அண்ணா' மலரில் இடம்பெற்றிருந்த கட்டுரையொன்றை 2-5-71 சுதந்திரனில் மறுபிரசுரம் செய்திருந்தோம். அக்கட்டுரையில் அபிதான சிந்தாமணியே தமிழில் வெளிவந்த முதல் கலைக் களஞ்சியம்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இக்கருத்தை ஆட்சேபித்து, தமிழின் முதல் கலைக் களஞ்சியம் 1902ல் வெளியான 'அபிதான கோசம்' என்றும் இதை வெளியிட்டவர் ஈழத்தவரான யாழ்ப்பாணத்து மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை என்றும் நமக்கு எழுதியிருக்கிறார் கவிஞர். இ. நாகராஜன்.

தமது கருத்துக்கு ஆதாரமாக இதுபற்றி 2-11-62 ''இந்து ஓர்கனில்'' வெளிவந்த வி. முத்துக்குமாரசுவாமியின் கட்டுரையையும், 21-3-68 ஈழநாடு இதழில் சி. பரம்தில்லைராஜா எழுதியுள்ள கட்டுரையொன்றையும் இணைத்து அனுப்பியுள்ளார் கவிஞர்.

ஈழத்தறிஞரின் முதல் முயற்சியை சுட்டிக் காட்டி 'சுடர்' கட்டுரையாளரின் தவற்றினை எடுத்துவிளக்கிய கவிஞருக்கு எமது நன்றி—

—ஆசிரியர்

## மகாத்மா மணிமொழிகள்

துப்பாக்கி முனையில் நடக்கும் பொதுவுடைமைப் புரட்சிகளை நான் வெறுக்கிறேன். ஆனால் இருப்பவன் தன்னிடம் இருப்பதை இல்லாதவனோடு பங்கிட்டுக்கொள்ள முன்வராவிட்டால் இந்நிலை எப்படியும் நேர்ந்துவிடுமென்றும் எச்சரிக்கிறேன்.

ஒரு செல்வந்தனிடம் தானியங்களும் தனமும் குவிந்துகிடக்க ஆயிரக்கணக்கான ஏழைகள் அவனெதிரே மடியும் நிலை எங்கிருந்தாலும் அந்தச் சமூகம் நாகரீக மடைந்ததாகச் சொல்ல முடியாது. உணவு, உடை போன்ற வாழ்வின் தேவைகளை சமமாகப் பங்கிட்டுத் தருவது அரசின் கடமை.

—காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓர் அமைச்சர் உள்ளூருக்கு வருகிறார்'

[எந்த அரசாங்கத்திலிருந்து எந்த மந்திரி வந்தாலும் ஊர் கலகலப்படைவது இயற்கை. இதனை நகைச்சுவைக் கண்ணோட்டமிட்டு எழுதப்பட்டதே இக்கட்டுரை.]

எந்த ஜுரம் மனிதர்களை மகாமோசமாக அலைக்கழிக்கும் என்று நீங்கள் கேட்டால் நான் மறுபேச்சின்றி "மந்திரி—ஜுரம்" என்று சொல்லிவிடுவேன். கவனித்துப் பார்த்திர்களானால் தெரியும், 'மந்திரி ஜுரம்' பிடித்தவர் ஓரிடத்தில் இருக்கமாட்டார்; மாலையும் கையுமாகத் திரிவார்; சிகரங்களுக்கு 'ஆர்டர்' கொடுப்பார்; உச்சியைச் சொறிந்து கொண்டு அலைவார்.

திடீரென்று ஒரு நாள் எங்கள் ஊரிலும் இந்த ஜுரம் தொற்றியது; "மந்திரி வருகிறார்!" என்ற வசனம் கேட்டதுதான் தாமதம், எல்லோரும் துள்ளியெழுந்தனர்: "ஆ! மந்திரி வருகிறார். அவருடைய பாத தரிசனத்துடன் எங்கள் ஊர் பிரபல்யம் அடைந்துவிடும்!" என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் பம்பரமாகச் சுழன்றனர்.

### பழைய காரியாலயம்

முதன்முதலாக எங்கள் ஊரில் நடந்த வேலை, 'சிவனே' யென்று கிடந்த ஒரு பழைய கட்டடத்துக்கு வர்ணம் பூசியதுதான். இரண்டு 'பெயிண்டர்கள்' பனி, வெயில் பாராது இரவு பகலாக 'ஓவர்டைம்' செய்து அத்தப்பழைய கட்டிடத்துக்கு உயிர் உண்டாகுமாறு செய்து பெயர்பலகையையும் மாட்டினர்; வருகிற மந்திரிக்கு அதைத்தான் கட்சிக் காரியாலயமென்று கூறுவதாக எங்களூர்ப் பெரியவரின் 'ஐடியா.'

இருந்தாலும் புதிதாக வர்ணம் அடித்துப் புதிய மேசையையும் வைத்துவிட்டால் வருகிற மந்திரி "இது என்ன புதிதாக முளைவிட்ட காரியாலயமா?" என்று சந்தேகித்துவிடக் கூடும் என்ற நியாயமான—அச்சத்தின் காரணமாகப் பழைய பேப்பர் கடையொன்றிலிருந்து நாலு இறாத்தல் பழைய தினசரிகள் வாங்கி வந்து அறையின் நாலு மூலையிலும் சிந்திறாற்போல வீசிவிட்டனர். மேசையில் மட்டரக மைப்புட்டியைக் கவிழ்த்து மையைச் சிந்தி மேசையைப் 'பழசாக்கினர்'. இது எல்லாம் போதாதென்று ஒரு அதிமேதாவி சொன்னபடி போன வருட மாதக் கலண்டர் ஒன்றின் அருகில் இந்த வருடக் கலண்டரையும் தொங்கவிட்டார்கள்.

### சுத்தம்

மந்திரிஊருக்குள் நுழையும் சந்தியில் அலங்கார வளைவு இருக்கவேண்டியது அத்தியாவசியம் என்ற கொள்கையில் ஊர்ப்பெரியவரொருவர் உறுதியாக நின்றார். இதற்காக இலங்கைத் தீவின் அதிசிறந்த சிகர அமைப்பாளரை ஒழுங்குபடுத்தினார்கள். அலங்கார வளைவில் அமைச்சரின் பெயர் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. (முதல்தரமான முட்டாள்தனம் என்னவென்றால், இந்த மின் விளக்கு அலங்காரத்தைப் பார்க்க முடியாதவாறு 'அமைச்சர் பகலில் விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்ததுதான்!) அலங்கார வளைவுச் சந்தியிலிருந்து மந்திரி போகும் வீதிகளெல்லாம் வாழைப் பழத்தோல்கூட இல்லாமல் சுத்தமாக இருக்குமாறு கவனிக்க 'ஸ்பெஷலாக' இருபது தொழிலாளிகள் அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

மாண்புமிகு மந்திரியார் 'திக் விஜயம்' செய்யும் பாதையில் இருந்த அரசாங்க உள்ளூராட்சிக் கட்டடங்களெல்லாம் புதிதாக வர்ணப் பூச்சுப் பெறும் பாக்கியம் பெற்றன. தந்திக் கம்பங்கள் தபால் பெட்டிகள் (ஏன் வெளிப்படையாகச் சொல்லப்போனால் பொது மலசலகூடங்களும் கூட) புது எழிலுடன் மந்திரியாரை வரவேற்கக் காத்திருந்தன.

ஊர்ப் பிரமுகர்களெல்லோரும் மந்திரியாரின் வரவை 'ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.? (தமிழ்ப் படங்களை எதிர்பார்ப்பது போல—என்று கருதுகிறீர்களா?) ஆவலுடன் எதிர்பார்த்த பிரமுகர்களின் பிள்ளைகளோ, மருமக்களோ அரசாங்கசேவையில் நியமனமோ, அல்லது மாற்றமோ பெறத் துடிப்பவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடுவது நாசூக்குக் குறைவான காரியமாகும்.

இவர்களைத் தவிர மந்திரியுடன் "புராதன" காலத்தில் ஆரம்ப "அரிவரி" வகுப்பில் படித்த சிலர் தங்கள் பழையகால "விளையாட்டுகள்" ஏதாவது ஞாபகம் வருகிறதா என்று மண்டையைப் போட்டுக் குடைந்து கொண்டார்கள். (அந்த அனுபவங்களை அமைச்சருக்குச் சொல்வது அவர் தலையில் ஐஸ் வைப்பது அல்லவா என்று நீங்கள் முணுமுணுப்பது எனக்குக் கேட்கிறது!)

### வந்தார்! வந்தார்!!

கடைசியில் அந்தநாள் வந்தது. வழக்கம்போல அரை மணித்தியாலம் தாமதித்து மாண்புமிகு மந்திரியார் வந்து சேர்ந்தார். 'தாம் தேசியக் கனவான்கள்' என்பதைக் காட்டப், புதிதாகத் தைத்துப் பழமையாகத் தோன்றுவதற்காகச் சலவைக்கு அனுப்பியெடுக்கப்பட்ட 'நாஷனல்'களை அணிந்த ஊர்ப் பெரியவர்கள் மந்திரியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

இந்தப் பிரமுகர்களுள் வருங்காலத்தில் தேர்தலில் குதிக்கும் எண்ணமுடைய சில பிரமுகர்கள் சமயத்தில் மந்திரிக்கருகே ("குரூப்" போட்டோவுக்குப் "போஸ்" கொடுப்பது போல) நின்று பத்திரிகைப் புகைப்படக்காரர்களின் 'காமரா'க்களுக்குள் சிக்க முயன்றார்கள்.

மந்திரியாருக்கு ஏறத்தாழ மூச்சு முட்டிப்போயிற்று. உதவிக்கு வந்த மந்திரியாரின் அந்தரங்கக் காரியதரிசி, "பிளீஸ்... அமைப்பாளருடன் ஒருமுறை பேசலாமா?" என்று கேட்டார்.

**ஆர். சிவராஜன்**

அமைச்சரின் மீது மோதிக் கொண்டிருந்தவர்களெல்லாம் ஒருமுறை ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

"அமைப்பாளரா;"

"அமைப்பாளரா?"

"அமைப்பாளரா?"

அமைச்சரை சூழ இருந்தவர்கள் இப்படியொருவரையொருவர் விசாரித்துக் கொண்டிருந்தபோது வெளியே இருந்து ஒருவர் கத்தினார்:-

"அமைப்பாளர் இங்கே நிற்கிறேன், இவர்கள் என்னை—நெருங்க இடம்விட்டால்தானே!"

### குப்பை வண்டி

அமைச்சருடைய காருக்கு முன்னால் பொலிஸ் ஜீப்புகள் சென்றதைத்தான் பலர் அவதானித்தார்கள்; ஆனால் இதற்குப் பத்து நிமிடங்களுக்குமுன்னர், அமைச்சருக்கு-முன்னால் புறப்பட்ட குப்பை வண்டியை எவருமே அவதானித்திருக்கமாட்டார்கள். இந்தக் குப்பை வண்டி அமைச்சருக்கு முன்னராக அமைச்சர் போகும் வீதிகளில் கிடந்த சிறு குப்பை கூளங்களையும் (சில சமயம் தெருவில் கிடந்த மலத்தையும்) வாரிக்கொண்டு போயிற்று.

பின்னர் அமைச்சர் 'ஜம்' மென்று துடைத்துவிட்டாற் போன்றவீதியில் மகரதோரணங்களிற்கிடையில் காணப்பட்ட 'வாக்காளப் பெருமக்களுக்குக் கரம்கூப்பிய-படியே விரைந்தார்.

அமைச்சருக்கு ஏக சந்தோஷம்! "இந்த தொகுதி மக்கள் அளித்த பரிசுத்தமான, பிரமாண்டமான வரவேற்பை நான் எங்குமே கண்டதில்லை!" என்று மனம் திறந்து சொன்னார். சந்தர்ப்பத்தைத் தவறவிடாத ஊர்த் தலைவர், "எங்கள் ரோட்டுகள் பாழடைந்துள்ளன. தபால் பெட்டிகள் பழுதடைந்திருக்கின்றன., பொது மலசலகூடங்கள், நூல் நிலையங்கள் யாவும் தூர்ந்திருக்கின்றன. மின்சாரம் சிர்கெட்டிருக்கிறது; நகரின் சுகாதாரம் அபாயகரமான நிலையில் இருக்கிறது; இவற்றை கௌரவ அமைச்சர் கவனித்து ஆவன செய்ய வேண்டும்!" என்று சொல்லி வைத்தார்; அமைச்சர் புன்சிரிப்புடன் தலையசைத்தார்;

> **நகைச்**
> **சுவைக்**
> **கற்பனை**

### ஒன்றையும் காணோம்

அமைச்சர் விஜயஞ் செய்து ஆறுமாதங்களாகியும் அபிவிருத்தி வேலைகள் எதுவுமே நிகழவில்லை: வீதிகளில் தண்ணீர் தேங்கி மீன்கள் நீச்சலடித்தன, பழைய பாடசாலையொன்று இடிந்து விழுந்து இரண்டு மாணவர்கள் பலியானார்கள்; நிதி நிலைமை மோசமடைந்த இரண்டு நூல்நிலையங்கள் மூடப்பட்டன; பொதுமலசலகூடங்கள் போதிய கவனிப்பின்றி நாற்றமெடுத்தன.

ஊரின் மோசமான நிலையைச் சகிக்கமுடியாத சில பெரியவர்களின் தூதுக்குழு கௌரவ அமைச்சர் அவர்களைப் பேட்டிகண்டது. பேட்டிமுடிந்து திரும்பிவந்த ஊர்ப்பெரியவர்கள் தலையிலடித்துக்கொண்டு சொன்னது இதுதான்:—

அமைச்சர் இவர்களுடைய கோரிக்கையைச் செவிமடுக்கவே மறுத்து விட்டாராம். அவருடைய விஜயத்தின் போது ஒரு பழுதடைந்த வீதியையோ, ஓர் உடைந்த தபாற்பெட்டியையோ, ஒரு வர்ணம் தூர்ந்த கட்டிடத்தையோ ஒரு நாற்றமெடுக்கும் மலசலகூடத்தையோ தானும் காணவில்லையாம்; இவ்வளவுக்கு அருமையாக முன்னேறிய ஊர் இலங்கையில் வேறெங்குமே இல்லையாதலால் இலங்கையில் ஏனைய பின்னடைந்த ஊர்களை இந்த ஊரின் தரத்துக்குக் கொண்டுவந்து விட்டுத்தான் எங்கள் ஊரைக் கவனிக்க முடியும் என்று உறுதியாகச் சொல்லிவிட்டாராம் அமைச்சர்.

எனவே இனிமேல் எங்கள் ஊருக்கு வரும் அமைச்சருக்கு எங்கள் ஊர் "நிர்வாணமாகவே" காட்சியளிக்கக்கூடும்! (கற்பனையே)

---

# வரலாறு காட்டும் தேயிலைத்தோட்ட நாட்டுப்பாடல்கள்

**மலையகத்திலே.......**

## (3) வந்து நிற்கும் தொண்டி கப்பல்கள்

பிழைப்பிற்காக தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த மக்கள் கப்பல் மார்க்கமாக வந்தார்கள். ஆனால் 1914ம் ஆண்டிற்கு முன்னால் சிறு வள்ளங்கள் மூலமாகவே கடலைக் கடந்துவந்தார்கள். வள்ளங்கள் எதுவுமின்றி நீர் நிறைந்த மண் திட்டுக்களாக அப்போது இருந்த "ராமர் அணை"யை கால் நடையாகவும் நடந்து கடந்துவந்ததாக தொண்டுக் கிழவர்கள் இன்றும் சொல்லக் கேள்வி.

இலங்கையை நோக்கி வந்தவர்கள், தொண்டி துறைமுகக் கரையிலிருந்துதான் ஏற்றப்பட்டு, இலங்கைக்கு அழைத்துவரப்பட்டார்கள்.

"வங்காளம் கொங்கு
மலையாளம்
டில்லி யாழ்ப்பாணம்
கண்டி கொழும்பு சீமை
மங்கலம் போயி
நொடிநொச்சி
வந்து நிற்குமாம்
தொண்டி கப்ப"

இலங்கைக்குப் புறப்பட்டவர்கள் என்றுமே கடலைப் பார்த்தவர்களல்லர். கப்பலைக் கண்டவர்களல்லர். இலங்கைக்குக் கப்பல் ஏறுவதற்காக தொண்டிக்கரையைச் சேர்ந்தவர்களுக்கு வெளியூர்களிலிருந்து கப்பல்கள் வந்து நிற்பதைப் பார்ப்பதற்கு வியப்பாக இருந்தது.

"தொண்டி இருகரை
பொய்கையிலே
ரெண்டு ஜோடிகள்
மட்டங்க நிற்கையிலே
மேகங்கள் ஓடிப் பொழுதை
மறைக்க
மெல்லியரே கொஞ்சம்
தள்ளி நட"

கப்பல் ஏறிப் போவதற்காக அங்கே குடும்பமாக வந்து நிற்கிறார்கள்; ஜோடியாக வந்து நிற்கிறார்கள்; தனியாகவும் நிற்கின்றார்கள், கூட்டமாகக் குழுமி நிற்கிறார்கள். என்றுமேகப்பலைப் பார்த்திராதவர்களுக்கு கப்பல்கள் வந்து நிற்பது அதிசயமாகயிருக்கிறது.

இவ்வாறு வந்து நிற்கும் கப்பல்களில் ஏறி இலங்கைக் கரையை அடைகிறார்கள்.

★

தொண்டி கப்பல்களிலும் (கப்பல் போக்குவரத்து ஆரம்பமாவதற்கு முன்னால்—இலங்கை இந்திய அரசுகளின் ஒப்பந்தத்தின்மூலம் 1914ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "இஸ்ரீம் போட்" போக்குவரத்திற்கு முன்னால்) வள்ளங்கள் மூலமும் இலங்கைக் கரையை அடைந்தார்கள்.

"வாடையடிக்குதடி
[illegible]
...அடிக்குதடி—நாம
சேர்ந்துவந்த கப்பலிலே"

கப்பல்களிலே கடலைக் கடந்து வந்தபோது படாத பாடுபட்டார்கள். காற்று மழை கடும் புயலையெல்லாம் எதிர்த்து கரையை அடைந்தார்கள்.

"தொண்டி தூத்துக்குடி
வந்து
பட்டியில் மாடு
அடைப்பதுபோல
அவர்பட்டபாடு
இரவும் முழுவதும்
காலை விடியவே
கரைவந்து சேரவே...
ராகமத் துறையில்
வந்து இறங்கி
பார்த்தார்கள் —நெஞ்சை
தட்டியும் கொட்டியும்
படிச்ச வித்தையெல்லாம்
காட்டி
ஏத்தினார் ஆளைக் கோச்சியில்
போவதற்கு
ஏழுநாள் காவல்
முடிந்த பின்பு"

தொழிலாளர்கள் இலங்கைக்கு வரத் தலைப்பட்ட ஆரம்ப காலத்தில் நோய் நொடியால் அவதியுற்றார்கள். எங்கனும் வைத்திய வசதியில்லாத காரணத்தால் 1899ம் ஆண்டில் 'குவாரண்ட் கேம்ப்' தலைமன்னாரில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்னால் கரையை அடைந்ததுமே மலையகப் பிரதேசத்தை நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தார்கள். இந்த 'கேம்ப்' வருகைக்கு முன்னால் நோய் நொடி தடுப்புக் காரணமாக ஏழு நாட்கள் அங்கேயே தடுத்துவைக்கப்பட்டு பின்னரே செல்ல அனுமதிக்கப் பட்டார்கள்.

**தொ. சிக்கன்ராஜா**

"... ... ...
... ... ...
நாங்கள் வந்த கப்பலிலே
ஜனக்கூட்டம்"

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நூல் விற்பனையாளர் கருத்து

# ஈழத்து சஞ்சிகைகள் ஏன் விற்பனையாவதில்லை?

## எழுத்தாளர் - விற்பனையாளர் - வாசகர் எல்லோரும் பொறுப்பாளிகளே!

ஈழத்தின் மிகப்பெரும் தமிழ் நூல் விற்பனையாளர்களான 'ரகுநாதன் பதிப்பகத்துள்' நுழைந்தேன். 'தமிழகத்திலிருந்து வரும் சஞ்சிகைகளைத் தடுத்து நிறுத்து' ஈழத்துப் பத்திரிகைகளின் விற்பனையை மட்டும் இங்கே நடத்து'. என்று இப்போது ஒரு புதுக் குரல் கிளம்பியிருக்கிறதல்லவா?

இதுபற்றி ஈழத்தில் உள்ள அனுபவமிக்க நூல் விற்பனையாளர் ஒருவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுப் பார்ப்போமே என்ற எண்ணந்தான்.

பேட்டி கண்டவர்:
'மேகநாதன்'

பதிப்பகத்துள் நுழைந்ததும் திரு. பத்மநாதன் அவர்கள் இருக்கிறாரா? என்று கேட்டேன். 'ஒரு முக்கியமான அலுவலாக வெளியே போய் இருக்கிறார். கொஞ்சம் பொறுங்கள் வந்துவிடுவார்' என்று சொல்லி என்னை உட்கார வைத்தார் நண்பர் செல்வராஜ். அவர்தான் ரகுநாதன் பதிப்பகத்தின் சுறுசுறுப்பான நிருவாகி.

பதிப்பகத்தில் விற்பனைக்காக புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு என்னை நண்பர் செல்வராஜ் அழைத்துச் சென்று நூல்களையெல்லாம் காட்டினார். சஞ்சிகைகள் குவிந்து கிடந்த முன்புற விற்பனைப் பீடத்தையும் பார்த்தேன். ரகுநாதன் பதிப்பகத்தினர் உண்மையில் ஈழத்தின் பெரும் புத்தக விற்பனையாளர்கள்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

"அதோ.........நீங்கள் எதிர்பார்த்தவர் வருகிறாரே!" என்றார் செல்வராஜ். திரும்பிப் பார்த்தேன்—அவர்தான்—பதிப்பக உரிமையாளர் திரு. பத்மநாதன் வந்துகொண்டிருந்தார். வணக்கத்தைக் கூறி—நேரத்தை வீணாக்காமல், வந்த காரணத்தை அவரிடம் விளக்கிவிட்டு—உடனே பேட்டியை ஆரம்பித்தேன் நான்.

நான்:- நீங்கள் புத்தக விற்பனையாளராக இருப்பதால் உங்களிடம் தமிழினத்தில் இன்று அடிபடும் முக்கியமான ஒரு விஷயம் பற்றிப் பேசலாம் என்று வந்திருக்கிறேன்.

அவர்:- சொல்லுங்கள்.

நான்:- ஈழத்தில் தமிழ்ச் சஞ்சிகைகள் இறக்குமதி ஆவதால் இங்கு வெளியாகும் சஞ்சிகைகள் விலை போவதில்லை என்கிறார்களே—இது பற்றித் தங்கள் கருத்து என்ன?

அவர்:- இதை நான் ஒரு போதும் ஒப்புக்கொள்ள மாட்டேன். இப்படிச் சொல்வது ஈழத் தமிழர்களுக்கே இழுக்கான காரியமாகும். அடுத்த வீட்டுக்காரனின் மனைவி என் முற்றத்துக்கு வருவதால் என் மனைவியின் அழகு எடுபட மாட்டேன் என்கிறது. ஆகவே, அவன் என் முற்றத்துக்கு வர நான் விடமாட்டேன் என்று சத்தம் போடும் பைத்தியகாரனின் வெட்கங்கெட்ட வேலை அல்லவா இது?

(எனக்குச் சிரிப்பு வருகிறது. சிரிக்கிறேன்.)

நான்:- எடுத்த எடுப்பில் இப்படிப் பிடிக்கிறீர்களே—ரகுநாதன் பதிப்பகத்துக்கு விற்பனைக்கு வரும் எல்லா நூல்களையும் படித்து முடித்திருப்பீர்கள் போலிருக்கிறது. எழுத்தாளர்களைப் போலவே உவமையோடு பேசுகிறீர்கள்......அது சரி—அப்படியானால் ஈழத்தில் தமிழகச் சஞ்சிகைகள் விற்பனையாகும் அளவு உள்நாட்டுச் சஞ்சிகைகள் ஏன் விற்பனையாவதில்லை? நீங்கள் என்ன காரணம் சொல்கிறீர்கள்?

அவர்:- என்னைப் பொறுத்தவரை முக்கியமான காரணம் எழுத்தாளர்கள்—வாசகர்கள்—விற்பனையாளர்கள் ஆகியோர் மூவரினதும் அலட்சிய மனப்பான்மை என்றே கூறுவேன்.

நான்:- விளக்கிச் சொல்லுங்கள்.

(திரு. பத்மநாதன் அவர்கள் இக்கேள்விக்கு ஒரு நீண்ட பிரசங்கமே செய்து விடுகிறார். அப்பிரசங்கத்தைப் பத்திரிகை நிருபர் ஒருவர் வெளியிடும் பாணியில் கீழே தருகிறேன்.)

"எழுத்தாளர்கள் எல்லோரும் சஞ்சிகை ஆசிரியர்களாகிவிட முடியாது. இலங்கையில் எல்லா எழுத்தாளர்களும் சஞ்சிகை ஆசிரியர்களாகி விடுகிறார்கள். இதுதான் ஈழத்துச் சஞ்சிகைகள் தோல்வியடையக் காரணமாகும்".

இவ்வாறு ரகுநாதன் பதிப்பக உரிமையாளர் திரு. பத்மநாதன் அவர்கள் கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"எழுத்தாளர்கள் கவிதை எழுதலாம்—கட்டுரை எழுதலாம்—நாவல் எழுதலாம்—ஆனால் இவ்வளவையும் எழுதி வெறும் தொகுப்பு ஆக்கினால் அது ஒரு தொகுப்பாகத்தான் இருக்க முடியுமே தவிர—அது ஒரு சஞ்சிகை ஆகிவிடாது. சஞ்சிகை ஆசிரியர் என்பவர் வாசகரை மனதில் வைத்துக்கொண்டு—சஞ்சிகைக்கு வரும் விஷயங்களைத் தரப்படுத்தி—ஜனரஞ்சகமானவற்றை மட்டும் தெரிந்தெடுத்து — ஓர் சுவையான தேநீரைப் பருகுவது போல் சஞ்சிகை படிப்பவன் உணரும் வகையில் அதை உருவாக்க வேண்டும். ஈழத்தில் சிலர் மருந்து கொடுப்பதுபோல் உயர்ந்த தத்துவக் கட்டுரைகள் — சிறுகதைகள் ஆகியவற்றை நிறைத்து சஞ்சிகைகளை வெளியிடுகிறார்கள். இவ்வாறு சஞ்சிகைகளை உருவாக்கும் ஆசிரியர்கள் வாசகர்களை அறவே மறந்துவிடுகிறார்கள்.

இலங்கையில் எழுத்தாளர்கள் படிக்கக்கூடிய தரத்தில்தான் சஞ்சிகைகள் உருவாகின்றனவே தவிர வாசகர்கள் படிக்கக்கூடிய தரத்தில் சஞ்சிகைகள் வருவதாய் இல்லை.

ஈழத்தில் வெளிவரும் பத் பத்திரிகைகளில் 'சிரித்திரன்' என்ற ஒரு நகைச்சுவை ஏடு மட்டும்தான் சிறந்த சஞ்சிகையாகத் தொடர்ந்து வெளிவருகிறது. இங்குள்ள ஏனைய சில சஞ்சிகைகளின் ஆசிரியர்களும் திறமைசாலிகளே!—ஆனால் அவர்கள் தங்கள் பத்திரிகை ஜனரஞ்சகமாக வெளிவரவேண்டும் என்பதில் அக்கறை எடுக்கவேண்டும். இக்கருத்தை ஒளிவு மறைவு இன்றிக் கூறும் என்னை எனது அருமை நண்பர்களான ஈழத்தின் சஞ்சிகை ஆசிரியர்கள் கோபிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

"ஈழத்தில் சஞ்சிகைகள் தோல்வியடைவதற்கு அடுத்த காரணமாக இருப்பவர்கள் வாசகர்களே! 'ஈழத்துச் சஞ்சிகையா? அதில் என்ன இருக்கப் போகிறது?' என்று இங்குள்ள வாசகர்கள் தங்கள் நாட்டுத் திறமையை தாழ்வாக எடை போட்டு விடுகிறார்கள். தமிழகத்தில் உள்ள வாசகர்கள் ஈழத்து நூல்களை—ஈழத்து எழுத்தாளர்களை மதித்துப் பாராட்டும் அளவுக்கு ஈழத்து வாசகர்கள் பாராட்டுவதில்லை. ஈழத்துச் சஞ்சிகைகளை வாங்கி— அச்சஞ்சிகைகளின் ஆசிரியர்களுக்கு சஞ்சிகைகளின் குறைகளைச் சுட்டிக்காட்டி அவர்களை உற்சாகப் படுத்த ஈழத்து வாசகர் முன் வரவேண்டும்.

மூன்றாவது, பத்திரிகை வியாபாரிகளையும் ஈழத்துச் சஞ்சிகைகளின் தோல்விக்கு ஒரு காரணமாகச் சொல்லலாம். கொழும்பில் உள்ள சில பெரிய புத்தக வியாபாரிகள் தமிழகத்து சஞ்சிகைகளின் இறக்குமதியாளர்களாக இருப்பதால், தங்கள் வியாபார நலன் கருதி, ஈழத்துப் பத்திரிகைகளை மறைத்து பதுக்கி—ஒழித்து விடுகிறார்கள். தங்கள் கடைகளில் ஈழத்துப் பத்திரிகைகள் விற்பனைக்கு வந்தால் அவற்றை அவர்கள் விற்பனைக்கு வைப்பதில்லை. இது தனி முதலாளிகளின் திட்டமிட்ட சதியாகும். இவர்களை அடையாளம் கண்டு, ஈழத் தமிழ் வாசகர்கள் இம்முதலாளிகளை ஒழித்துக் கட்ட வேண்டும்.

நான் தமிழகத்தில் இருந்து சஞ்சிகைகளும் நூல்களும் ஈழத்துக்கு இறக்குமதியாவதை நூறு வீதம் வரவேற்பவன். ஆனால் அதே வேளையில் ஈழத்துச் சஞ்சிகைகளைப் புறக்கணித்து தமிழகச் சஞ்சிகைகளைத் தனியே தூக்கிப் பிடிக்கும் கூட்டத்துக்கு எதிரானவன்.



பேட்டியளித்தவர்:
திரு. க. பத்மநாதன்
(உரிமையாளர்,
ரகுநாதன் பதிப்பகம்)

ஈழத்தில் உள்ள தமிழினம் பல்லாயிரம், பல்லாயிரம் ஆண்டுகள் அழிவற்று தொடர்ந்து வாழவேண்டுமானால் ஈழத்தில் அந்த இனம் தமிழ் வளர்க்கும் சஞ்சிகைகளை பரந்த அளவில் வெளியிட்டு — மக்களைத் தமிழ் உணர்ச்சியில் தோய்த்துக்கொண்டே இருக்க வேண்டும்"

இவ்வாறு கூறினார் திரு. பத்மநாதன்.

---

## 'தமிழர்களின் உரிமைகளை இனியாவது வழங்குங்கள்'

'இலங்கையின் வரலாற்றிலே இன்று ஏற்பட்டிருக்கும் நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் மிகவும் புத்தியாகவே நடக்கிறோம். தமிழர்களுக்கு நாட்டுப் பற்று இல்லை என்று கூறியவர்களுக்கும் தமிழர்களை இந்நாட்டில் ஓர் இரண்டாந்தர பிரசைகள் — ஆளப்படும் மக்கள் என்று கருதியவர்களுக்கும் ஒன்று கேட்கிறேன்—இன்று யார் நாட்டுப் பற்றுள்ளவர்கள்! தமிழர்கள் ஒரு போதுமே பலாத்காரத்தை விரும்பியதும் இல்லை விரும்பப் போவதும் இல்லை.

'தமிழர்களின் புனித தலைவர் தந்தை செல்வநாயகம் காட்டிய அறவழியில் சத்திய நெறியில் அஹிம்சை ரீதியில் தமது உரிமைகளுக்காகப் போராடப் பயிற்றப்பட்ட தமிழ் மக்களை பலாத்கார வழியை காட்டி எவரும் எளிதில் ஏமாற்ற முடியாது.

'தமிழர்கள் நல்லவர்கள் அவர்கள்; இந்த இயக்கங்களில் ஈடுபடவில்லை என்று இச்சபையில் நீங்கள் கூறியதை கேட்க என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை. இன்று தமிழர்களை பற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்தை தொடர்ந்து உங்களால் கடைப்பிடிக்க முடியுமா என்பதில் எனக்கு சந்தேகம் ஏற்படுகிறது. இதே போன்றுதான் எமது முந்தின தமிழ் தலைவர்களை உங்கள் தலைவர்கள் ஏமாற்றினார்கள் என்பதே தமிழர்களின் நம்பிக்கயாக இருக்கிறது.

'இன்று ஆகிலும் நீங்கள் தமிழர்களின் நாட்டுப் பற்றை உணர்ந்ததையிட்டு நான் சந்தோஷப்படுகிறேன்.

இனிமேல் என்றாலும் தமிழர்களின் உரிமைகளை வழங்கி அவர்களையும் இந்நாட்டு மக்கள் என்று கருதுங்கள்'

—மேற்கண்டவாறு யூனியன் பிளேசில் நடைபெற்ற அகில இலங்கைப் பட்டின சபைகளின் சமாசக் கூட்டத்தில் பேசிய யாழ் மாவட்ட பிரதிநிதியும், சுன்னாகம் ப. ச. உறுப்பினரும் தமிழரசுப் பிரமுகருமான திரு. ஆசீர்வாதம் ஹென்றி ஜே. பி. கூறினார்.

---

## மனச்சாட்சிக்கு...

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

ஷேகம்—திருவாரூரில் இருபதாண்டுகள் ஓடாததேரை ஓட வைத்தும் இருக்கிறது.

இதெல்லாம் தேர்தலுக்கு முன்பு செய்யப்பட்டதென்று சொல்வார்களானால் இந்த ஆண்டு திருவாரூரில் தேர் ஓடுவதற்காக தார்போட்ட சாலை வேண்டுமென்று கேட்டார்கள் அதற்கிணங்க அரசாங்க செலவில் 2 லட்ச ரூபாயில் சாலை போடப்படுகிறது. அதற்குப் பிறகு தான் தேரோட்டம்!

தேர்தலுக்குப் பிறகுதான் இங்கே திருப்பணி ஆரம்பமாகி இருக்கிறது.

தேர்தலுக்கு முன்பு நாங்கள் ஆண்டவனின் பக்தர்கள் என்றும் சொல்லவில்லை தேர்தலுக்குப் பிறகு நாங்கள் நாத்திகர்கள் என்றும் சொல்லிக்கொள்ளவில்லை!

எங்களுடைய கொள்கைகள்—நம்பிக்கைகள்—இலட்சியங்கள் வேறாக இருந்தாலும் மற்றவர்களின்—கொள்கை — நம்பிக்கை — இலட்சியங்களுக்கு இந்த அரசு குறுக்கே நிற்காது என்பதுதான் இன்றைய இந்தக் காட்சி.

—இவ்வாறு திருக்கழுக்குன்றம் கோவில் திருப்பணிகளைத் தொடக்கி வைத்துப் பேசிய கலைஞர் மு. க. குறிப்பிட்டார்.

---

## தமிழ் நாட்டின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றோம் என்பதற்காக, 'கொடுக்காதீர்கள் என்று சொல்கிறார்!

இந்த ஒரு பிரச்சினையில் இராஜாஜி, மத்திய அரசை ஆதரித்தாலும் — பேரவைத் தலைவர் மதியழகன் அவர்கள் குறிப்பிட்டதுபோல்—இதில் காலதாமதம் ஆகுமே தவிர, 'தி. மு. கழகத்தின் மாநில சுயாட்சிக் கோரிக்கை நான் காண்டில் கிடைக்குமா— நீங்கள் அமைச்சராக இருக்கும் காலத்திலேயே இருக்குமா—செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருக்கும் போதே கிடைக்குமா—அல்லது பாளையங்கோட்டைக்குப் போனால் தான், கிடைக்குமா' என்று கேட்டால், எந்தத் தொல்லைக்குப் பிறகு கிடைக்குமென்றாலும் அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்!

இன்றில்லாவிட்டாலும் நாளை — நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள், கழகத்தின் கொள்கை—மாநில சுயாட்சிக் கோரிக்கை கிடைத்தே தீரும்!

'அது வருகின்ற வரையில் நன்மைகளுக்காகக் காத்திருக்க வேண்டுமா — ஐயர் வருகின்ற வரையில் அமாவாசை காத்திருக்குமா?" என்று கேட்பீர்களானால், அமாவாசையை முழு பௌர்ணமி ஆக்க முடியாவிட்டாலும், அகல் விளக்கையாவது நிச்சயம் ஏற்றிவைப்போம்" என்று உறுதி கூறிக்கொள்வோம்!"

---

அண்ணாவின் பொன்மொழி

'சொல்கிறபடி செய்ய வேண்டும்' என்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்கும், 'சொன்னபடி செய்யக் காணோம் ஏன்? என்று கேட்கும் விழிப்புணர்ச்சி மக்களுக்கும் ஏற்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறு காட்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்கூட்டமாக, கங்காணிகள் தமிழ் நாட்டிலிருந்து மலைநாட்டை நோக்கி தொழிலாளர்களை அழைத்து வந்தார்கள், கப்பல்களில்.

தொண்டி தூத்துக்குடி, தனுஸ்கோடி வாயிலாக வந்த தமிழ் தொழிலாளர்கள் தட்டப்பாறை, அரிப்பு ஆகிய கரைகளில் இறங்கி, அனுராதபுரம் வழியாக குருநாகலை, பன்னமத்தை (மாத்தளை) ஊடாக மலைநாட்டை அடைந்தார்கள்.

★

கப்பல் போக்குவரத்து ஆரம்பிப்பதற்கு சில வருடங்களுக்கு முன்னால்தான் புகைவண்டிப் போக்குவரத்து ஆரம்பமானது. 1867ல் கொழும்பு கண்டி தொடரும் 1890ல் கண்டி நானுஓயாவுக்குமிடையிலும், 1884ல் மன்னூருக்கும், 1924ல் பதுளைக்கும் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு முன்னால் தட்டப்பாறை, அரிப்பு, மன்னார் கரைகளிலிருந்து மலைநாட்டிற்கு கால்நடையாகத்தான் நடந்து வந்தார்கள்.

இலங்கையின் நடு மையத்திலே மரகதக் கம்பளமாய் பல் வளம் கொஞ்சும் மலைநாடுவரை தொழிலாளர்களை பெரிய கங்காணிகளே வழி நடத்தினுர்கள். வடக்கே தமிழ்நாட்டிலே ஆசை வார்த்தைகளை அன்பொழுகப்பேசி கூலிக்கு ஆட்களை சேர்த்து ஆள் கட்டும்வரை கங்காணிகளுக்கு போதும் போதும் என்றாகிவிடும். எப்படி ஆயிரமாயிரம் அன்பு வார்த்தைகளை அள்ளித் தெளித்து அழைத்துவந்து கப்பலேற்றி, இலங்கைக் கரையில் சேர்த்த பின்னுல்தான் அவர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

“இனி மோசமில்லை
யொன்றும்
கங்காணியார் பாடு
முன்னவிட்டோட்டினுர்
தோட்டம் வரை”

அப்படி பொங்கி வழிந்த மகிழ்ச்சியைக் கொஞ்சம் அதிகாரத் தோரணையோடு மாற்றிக்கொண்டார்கள்: அவர்களை முன்னே விட்டு ஏவிச் சென்றுர்கள்.

“சோற்றுக் கடையிலே
சாதங்கள் சாப்பிட
துட்டு கொடுத்தாரு
தந்திரமாய்
லையோடு
தென்னங்குரும்பைகள்
அவல் கடலை பொரி
உருண்டை
கொண்டைக்கு பூவு
கண்டாங்கி சேலை
குலுங்கி நடக்க
வளையல் தந்தார்
தண்டை கொலுசுகள்
கண்டவர் மெச்சிட
கருமை வெள்ளிகள்
வாங்கிப் போட்டார்
தோட்டம் வருகிற
பாதையிலே கொஞ்சம்
தோசை பலகாரம்
வாங்கித் தந்தார்

அதற்குப் பின்னுல் காடுகளும், மலைகளும் செறிந்த மலைநாட்டுப் பிரதேசத்தை அடையும்வரை, மேடும் பள்ளமும் உயரமும்தான். உயர உயர ஏறும் மலைகளும் பயங்கர காடுகளுந்தான். தமிழ் நாட்டிலிருந்து வந்த தொழிலாளர்கள் அதுபோன்ற பகுதிகளை என்றுமே பார்த்திருக்கவில்லை. மலைக்காடுளை ஊடறுத்துச் செல்லவே அச்சப்பட்டார்கள். அந்த அச்சத்துக்கிடையில் புதிது புதிதாக திறக்கப்பட்ட தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லும் வரை— கரையை அடைந்ததும் கங்காணிகள் அதிகாரத் தோரணையோடு நடந்துகொண்டாலும்-மனங்கோணுமல் நடத்திச் சென்றுர்கள். அன்பு தோய்ந்த வார்த்தைகளுடன் அளப்பரிய உபசரணைகள்செய்து வரவேற்ருர்கள்.

“... ... ...
... ... ...
போட்டு நடத்தியே
தோட்டம்வரை அங்கு
பொழுது விடியவே
காத்து நின்ருர்”

தோட்டம் வரும்வரை தான் கங்காணிகளின் அன்பு வார்த்தைகளும் ஆதரவான பேச்சுக்களும். தோட்டங்களுக்குள் நுழைந்தவுடன் தங்களை மாற்றிக்கொண்டு அழைத்து வந்த தொழிலாளர்களை குட்டி இராஜாக்களாளுர்கள், பெரிய கங்காணிகள்;

## அரசியல் நிர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசும் மக்களும் இரு பெரும் பிரிவுகளாக இருக்கிருர்கள். தமிழ் பேசும் மக்களுடைய சார்பிலே நாங்கள் சில திருத்தங்களைக்கொண்டு வருகிறோம்: இவ்விதம்கொண்டு வந்தாலும் அவை பெரும்பான்மைவாக்குகளால் தோற்கடிக்கப்படும் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் இப்படியாக ஒரு நாடகம் ஆடிக்கொண்டிருக்கிறோம்.

நாங்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர, நீங்கள் அதைத் தோற்கடிக்க, இப்படியாக ஒரு நாடகம் நடத்தாமல் அரசியலமைப்புச் சபை உருவாக்கும் அரசியற் சட்டம் இந்த நாட்டில் எல்லாராலும்—தமிழ் மக்கள் எல்லாராலும் — ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாக அமையவேண்டும். அதை விடுத்து நாங்கள் கொண்டுவரும் திருத்தங்களை நீங்கள் தோற்கடித்துக்கொண்டிருந்தால் அது ஒரு நெறிமுறைக்கு உட்பட்டதாகாது.

எனவே, சிங்கள மக்களுடைய தலைவர்களும் தமிழ் மக்களுடைய தலைவர்களும் சேர்ந்து கூடி இந்த நாட்டில் எல்லோராலும் ஏற்றுகொள்ளத்தக்க ஓர் ஒற்றுமையான நிலைமை உருவாக்க வேண்டுமென்று கருதி பிரதம அமைச்சரையும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரையும் கண்டு மொழி முதலியன பற்றிப் பேசியிருக்கிறோம்: அதுபற்றிய தீர்மானங்கள் இன்னமும் இடம் பெறவில்லை.

அப்படிப்பட்ட மொழி விஷயங்களிற்கூட இப்படிப்பட்ட திருத்தங்கள் ஏறபட்டுத் தமிழினத்தினுடைய மொழி உரிமை முதலியன அவர்களுடைய மனத் திருப்திக்கு ஏற்பக் கொடுக்கப்படாவிட்டால் அரசியல் நிர்ணயசபையில் நாங்கள் இருப்பதில் பயன் இல்லை என்றஒரு நிலை உருவாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே, நாங்கள் எங்களுக்காகச் சில தீர்மானங்களைக் கொண்டுவர நீங்கள் அவற்றைத் தோற்கடிப்பதாக இருக்கும் நிலையை மாற்றி நீங்களும் நாங்களும் ஒன்றுபட்டு சுமுகமான முறையில் இந்த நாட்டில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க — பெரும்பான்மை மக்களால் மாத்திரமல்ல, சிறுபான்மை மக்களாலும் ஏற்றுக்கொள்ளத் தக்க— ஓர் அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கு இன்னமும் காலம் போய்விடவில்லை.

அப்படி ஒரு நிலையை உருவாக்காமல்விட்டால் மொழி அடிப்படை உரிமை வரும் பொழுது நாங்கள் இந்தச் சபையில் இருந்து விலக வேண்டிய நிலையை உருவாக்காமல் அதைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று நான் விசேடமாக பிரதம அமைச்சருக்கும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சருக்கும் கூறிக் கொள்கிறேன்.

## சிறுபான்மை மக்களின்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரலிங்கம், தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம்,

ஏ. எம். ஜினதாச:- தோல்வியடைந்த வேட்பாளர்... மக்களால் நிராகரிக்கப்பட்டவர்...”

தர்மலிங்கம்:- திரு. அ. அமிர்தலிங்கம், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம், சி. சிவானந்தசுந்தரம், த. காங்கிரஸ் துணைசெயலாளர் தா. சங்கரப்பிள்ளை.

அருளம்பலம்:- இவர்கள் அனைவரும் கட்சி சார்பில் கலந்துகொண்டார்களா?

தர்மலிங்கம்:- த. கா. கோப்பாய் வேட்பாளர் தா. குணரத்தினம், உடுவில் வேட்பாளர் எம். சிவனேசன். ஆகவே அம்மாநாட்டில் தமிழ் காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொண்டதை நீங்கள் காண முடியும். தமிழரசுத் தலைவர்களும் பெரும்பான்மையாக கலந்துகொண்டார்கள். இதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

நான் இதை இங்கு வாசித்துக்காட்டுவதன் நோக்கம் என்னவென்றால், இந்தப் பிரேரணை காங்கேசந்துறைப் பிரதிநிதி அவர்களின் பெயரில் இருந்தபோதிலும் அது தமிழ் மக்களின் ஏகோபித்த ஒரு தீர்மானம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான். எனவே, இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைப் பற்றி கௌரவ பிரதமரோடு பேசவேண்டி இருப்பதனுல் இந்த விவாதத்தை ஒத்திவைக்கும்படி கேட்டோம்.

### தனி மதத்துக்கு இடமளிப்பது சோசலிசத்துக்கு முரணுனது

அதுமட்டுமல்ல. இந்த அரசாங்கம் தன்னை ஒரு சோஷலிச அரசாங்கம் என்று சொல்லிக் கொள்கின்றது. உலகத்திலே எத்தனையோ சோஷலிச நாடுகள் இருக்கின்றன. எந்த ஒரு சோஷலிச நாட்டிலாவது அரசியலமைப்பில் ஒரு தனி மதத்துக்கு இப்படியான இடத்தைக் கொடுத்திருக்கிருர்களா என்பதை நான் அமைச்சர் அவர்களிடம் கேட்க ஆசைப்படுகின்றேன்.

இந்த நேரத்திலே மற்ற நாடுகளின் அரசியல் அமைப்புக்களை வாசித்துக்காட்டி சபையின் நேரத்தை எடுக்க விரும்பவில்லை. சோவியத் நாடு என்ருலும் சரி, யூகோசுலாவியா என்ருலும் சரி, கிழக்கு ஜெர்மனி என்ருலும் சரி, செக்கோசுலாவக்கியா என்ருலும் சரி, எந்த ஒரு சோஷலிச நாட்டிலாவது தனி ஒரு மதத்துக்கு இடம் கொடுத்திருக்கிருர்களா, தனி ஒரு மதத்தை வளர்ப்பதும் பாதுகாப்பதும் ஓர் அரசாங்கத்தின் கடமை என்று கருதியிருக்கிருர்களா என்பதை அமைச்சர் அவர்கள் பேசும் போது எடுத்து விளக்கிக் காட்டவேண்டும்.

எல்லா சோஷலிச நாடுகளிலும் மதத்திற்கும் அரசாங்கத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல்தான் கருமங்கள் நடைபெறுகின்றன. அந்தந்த நாடுகளில் மதத்தை அரசாங்கத்திற்கு வெளியே வைத்துத்தான் ஆட்சி நடைபெறுகின்றது. எல்லாச் சோஷலிச நாடுகளும் மதச்சார்பற்ற நாடுகளாகத்தான் இருக்கின்றன என்பதை சோஷலிசம் பேசுகின்ற, சோஷலிசத்தை அறிந்த எவரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட நிலையிலே இங்கே சோஷலிசத்தைப் பேசிக்கொண்டு இலங்கையினுடைய மதம் பௌத்த மதமாகத்தான் இருக்க வேண்டுமென்று கூறுவது சோஷலிசத்திற்கு முரண், ஜனநாயகத்திற்கு முரண் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது என்று கூறவிரும்புகிறேன்.

### ஏனைய மதங்களுக்கு இடம் இல்லையா?

வர்த்தக அமைச்சர் அவர்கள் மூன்ருவது அடிப்படைத் தீர்மானத்தைச் சமர்ப்பித்துப் பேசிய பேச்சிலே கூறினுர் இந்த நாடு சமய அடிப்படையிலே கட்டப்பட்டதாகையால்தான் நாம் பௌத்தத்திற்கு இடம் கொடுக்கின்ருேம் என்று. இந்த நாட்டின் மதம் பௌத்தம் மட்டுமல்ல; இந்த நாட்டில் இலட்சக்கணக்கான கிறித்தவர்கள் இருக்கிருர்கள். இந்த நாட்டிலே இலட்சக்கணக்கான சைவ மக்கள் இருக்கிருர்கள். இந்த நாட்டிலே இலட்சக்கணக்கான இஸ்லாமிய மக்கள் இருக்கிருர்கள். சமய அடிப்படையில் வளர்ந்தவர்கள் நாங்களாகையால் சமயத்திற்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு பௌத்தத்திற்கு மாத்திரம் முக்கியமான இடம் கொடுப்பது என்ன நியாயம் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன்.

பௌத்தம்தானு இந்த நாட்டின் மதம்? வேறு எந்த மதத்திற்கும் இந்த நாட்டில் இடம் இல்லையா? இந்த நாட்டு மக்கள் சமய அடிப்படையில் வாழ வேண்டும் என்ருல் இந்த நாட்டு அரசாங்கத்தின் கடமைகளுள் ஒன்று இந்த நாட்டிலுள்ள எல்லாச் சமயங்களையும் பாதுகாத்துப் பேணிவளர்க்க வேண்டியதாக இருக்கவேண்டுமென்று கூறி எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

## ஆட்சியாளர்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

கக்கூடாதென்று ஏழாந் தேதி தீர்ப்புக் கொடுக்கப் பட்டது. ஆனுல், இதனை ஆரும் தேதி இரகசியமாக அறிந்து, அவசரகால நிலையின் போர்வையின் கீழ் புது ஆளை நியமிக்கும்படி யாழ்ப்பாணத்துக்குத் தந்தி கொடுக்கப்பட்டது.

எனவே, இப்படிப்பட்ட மக்களின் ஆதரவைப் பெருத அமைச்சர்கள் செய்யும் அநீதிதான் மக்கள் மத்தியிலே இந்த அரசாங்கத்தை வெறுக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த அமைச்சர்களின் நடவடிக்கைகளைப் பற்றி இன்னும் எத்தனையோ விஷயங்களைக் கூற முடியும். ஆனுல் இப்பொழுது நேரம் இல்லாத காரணத்தால் அவைபற்றி வேருெரு முறை குறிப்பிடுவேன். எனவே, அரசாங்கத்தை நான் மன்ருட்டமாகக் கேட்பது என்னவென்ருல், இந்த அமைச்சர்களின் நடவடிக்கைகளை ஆராய்ந்து பாருங்கள். உங்கள் கொள்கையின் படி, உங்கள் மனச்சாட்சியின் படி அவர்கள் செய்வது சரியா என்று பாருங்கள்; அவர்கள் செய்வது உங்களுக்கு ஏற்காவிட்டால், நாட்டிலே பழையபடி செல்வாக்கைப் பெற இப்படிப்பட்டவர்களை நீக்கி நல்ல அமைச்சர்களை நியமியுங்கள் என்று கேட்கின்றேன்.

# தமிழுக்கு உரிமைகோரி

## தமிழ் ஊழியர்கள் பகிஷ்காரம்!

தமிழ் புறக்கணிக்கப்பட்டதால் தமிழ் தபால் அதிபர்கள் பகிஷ்கரிப்பு இயக்கத்தை நடத்தினர். கொள்ளுபிட்டி, புறக்கோட்டை தபாற்தந்திப் பயிற்சிப் பாடசாலையில் தபால் அதிபர்களுக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி முடிவில் ஊழியர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து புகைப்படம் எடுத்து பாடசாலையில் தொங்க விடுவதும், பிரிவுபசார நிகழ்ச்சி ஒன்றை நடத்துவதும் விசேஷ அம்சங்களாகும், இது பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இங்கு தொங்கவிடப்படும் புகைப்படத்தில் பாடசாலையின் பெரும் ஊழியர்களின் பெயர்ப்பட்டியலும் தனிச் சிங்களத்தில் மட்டுமே பல வருடங்களாக எழுதப்பட்டு வருகிறது. இவற்றை தமிழிலும் எழுதும்படி தமிழ் ஊழியர்கள் பலமுறை எடுத்துக் கூறியும் எந்தவித பலனும் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து உணர்ச்சி மிக்க தமிழ் ஊழியர்கள் கொள்ளுப்பிட்டிப் பாடசாலையில் பகிஷ்கரிப்பு இயக்கம் ஒன்றை நடத்தினர். புகைப்படத்திலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் எந்த வைபவங்களிலும் பங்கு பற்ருமல் பகிஷ்கரிப்பு செய்தனர். இதைத் தொடர்ந்த புறக்கோட்டையிலும் இதே பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

தமிழர்கள் சிறுபான்மையாக உள்ளதால் தமிழில் போட முடியாதென்றும் ஆங்கிலத்தில் போடுவதாகவும் சமரச உடன்பாடு ஒன்றை சிங்கள ஊழியர்கள் கொண்டுவந்தனர். ஆனுல் தமிழ் ஊழியர்கள் அதை ஏற்றுக்கொள்ளாது, ஆங்கிலம் போடுமிடத்தில் தமிழைப் போடுமாறு வற்புறுத்தினர். அது ஏற்றுக் கொள்ளப் படாததால் தமிழ் ஊழியர்கள் கூட்டத்தைவிட்டு வெளியேறி பகிஷ்கரிப்பு இயக்கத்தை நடத்துவதென தீர்மானித்தார்கள்.

இப்பகிஷ்கரிப்பு பற்றி ஊழியர்களின் கருத்து இதுதான்—தற்போது எதுவித பலனைக் கொடுக்காது விட்டாலும் இப்பகிஷ்கரிப்பு அடுத்த ஆண்டுகளில் நிச்சயம் பலனைக் கொடுக்கும்; அடுத்த ஆண்டுகளில் தமிழ் நிச்சயம் இடம் பெறும் இல்லையேல் தொடர்ந்து பகிஷ்கரிப்பு நடத்தப்படும். இப்படியான விஷயங்களில் எல்லாம் விட்டுக்கொடுப்பதால் தான் தமிழ்மொழிக்கு இந்த நிலைமை வந்துள்ளது என்றும் அந்த ஊழியர்கள் நம்புகின்ருர்கள்.

## வாலைச் சுருட்டி...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கள் திருத்தப் பிரேரணைகள் எதையும் கொண்டுவந்து உங்களுக்கு தொல்லை எதுவும் தரமாட்டோம்' என்று கன்னங்களில் போட்டுக் கொண்டு 'நல்ல அடிமைகளாக' தமது திருத்தங்களை வலியுறுத்தப் போவதில்லையென அ. நி. சபையில் அறிவித்து விட்டனர் தமிழ் காங்கிரஸ் பா. உ. க்கள்!

காலமெல்லாம் தமிழுக்கு சம அந்தஸ்து என்று முழங்கி வந்த தமிழ் காங்கிரஸ்கட்சியின் மானம் இப்படி யா கரைய வேண்டும்? என்று தமிழ் மக்கள் கேட்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


3வது வாரமாக காட்சியளிக்கிறது

எல்பின்ஸ்டன் (மருதானை) — றொக்ஸி (வெள்ளவத்தை) — றீகல் (நீர்கொழும்பு)

ஜெமினி, விஜயகுமாரி, நாகேஷ், அசோகன், ராஜ்ஸ்ரீ,


—நடித்த—



ம
னை
வி

2வது மாதம் செல்லமகால்

வின்சர் (யாழ்நகர்) — இம்பீரியல் (மட்டுநகர்)



மாஸ்டர் பிரபாகர் திறம்பட நடித்த

வாரராஜாவா

பிளாஸா

சிவாஜி சரோஜாதேவி

M. R. ராதா

—நடித்த—

பாலும் பழமும்

கெப்பிட்டல்

எம். ஜி. ஆர். அஞ்சலிதேவி

—நடித்த—

சர்வாதிகாரி

கிங்ஸ்லி

எம். ஜி. ஆர் சரோஜாதேவி

நாகேஷ்


—நடித்த—

அன்பே வா (கலர்)

விரைவில் எதிர்பாருங்கள்

கெப்பிட்டல்

பிளாஸா



ரவிச்சந்திரன்

ஜெயலலிதா

அசோகன் முத்துராமன்

நாகேஷ் ஷீலா

நடித்த

ராமண்ணாவின்

டைரக்ஷன்:—ராமண்ணா

மூன்றெழுத்து

3வது ஜனத்திரள் நிறைந்த மாதமாக காட்சிதருகின்றான்

செட்ன்ரல் (மருதானை)

ராணி (யாழ்நகர்)

—ஆகிய திரைகளில்—

நடிகர்திலகம்

* சிவாஜிகணேசன்

* கே. ஆர். விஜயா

* முத்துராமன்

சிவாஜிகணேசன் அளிக்கும் அருண்பிரசாத் மூவீஸ்



சதன்

நம்பியார்

எஸ்; என். லட்சுமி

விஜயசந்திரிகா

பேபிராணி

மற்றும் பலர் நடித்த

ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்

டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி; ஏ.)

இசை மெல்லிசை மன்னர்! எம். எஸ். விஸ்வநாதன் (பாஸ்கள்பாவும் ரத்து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் வைகாசி மாதம் 24-ம் திகதி திங்கட் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவைமகேசன்